இ) ஜீவனி, குளுக்கோள், பென்சைல் பென்சோவேற் கிறீம் ஆகியவற்றை உள்ளிட்ட ஒரு தொடர்வரிசையான பொருட்களைத் தயாரித்தலும் சந்தைப்படுத்தலும்

ஈ) மாதிரிச் சோதனைகளையும் ஆய்வுகூடச் சேவைகளையும் வழங்குதல்

2. தயாரிப்புக்கான அடிப்படை

2.1. தயாரிப்புக்கான அடிப்படை

நிதிக் கூற்றுகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்டவாறு SLFRS மற்றும் LKAS ஆகியவற்றைக் கொண்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2. அளவீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுகள் நடுநிலை மதிப்பீட்டில் தயாரிக்கப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் நீங்கலாக வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் நிறுவனத்தின் நடைமுறையில் உள்ளதும் அதனால் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான நாணயமாகிய இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.3. தொடர்ந்து செல்லல்

கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் அமைப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

3. கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களில் மாற்றங்கள்

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

மாற்றத்துக்கான திகதியாகிய 2018 ஜனவரி 1 முதல் கூட்டுத்தாபனம் SLFRS 9 மற்றும் SLFRS 15 ஆகியவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன் விளைவாக கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளில் திருத்தங்களை ஏற்படுத்தியது.

SLFRS 9 மற்றும் SLFRS 15 ஆகியவற்றின் நிலைமாறுகால ஏற்பாடுகளினால் அனுமதிக்கப்பட்டவாறு, ஒப்பீட்டுத் தொகைகளை வழங்குவதில்லை என கூட்டுத்தாபனம் தெரிவுசெய்தது. மாற்றத் திகதியில் நிதிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகை மற்றும் வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களிலிருந்து வருவாய் ஆகியவை நடைமுறைக் காலப்பகுதியில் ஆரம்ப நிறுத்திவைத்த வருவாய்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வெளிப்படுத்தல் குறிப்புகளுக்கு, SLFRS 7 வெளிப்படுத்தல்களுக்கான தொடர்ச்சியான திருத்தங்கள் தற்காலப்பகுதிக்கு மட்டுமே பிரயோகப்படுத்தப்பட்டன. ஒப்பீட்டுக் காலக் குறிப்பு வெளிப்படுத்தல்கள் முன்னைய ஆண்டின் வெளிப்படுத்தல்களை மீண்டும் கூறுகின்றன. SLFRS 15 இன் அங்கீகாரம் வருவாயின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனினும், ஏற்றுக்கொண்டதன் காரணமாக வருவாய் ஏற்பிசைவில் ஏதேனும் மாற்றங்களின் ஏதேனும் உட்கிடைகள் குறிப்பு 8யு இல் விளக்கப்பட்டுள்ளன.

SLFRS 9 ஐ ஏற்றுக்கொள்ளுதல் நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பொறுப்புகள், நிதிச் சொத்துகளின் தேய்மானம் ஆகியவற்றின் ஏற்பிசைவு, வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டின் கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. SLFRS 9 கூட SLFRS 7 "நிதிக்கருவிகள்: வெளிப்படுத்தல்கள்" போன்ற நிதிக் கருவிகளுடன் தொடர்பான ஏனைய நியமங்களை கணிசமான அளவில் திருத்துகின்றது.

SLFRS 9 ஐ ஏற்றுக்கொண்டதால் கூட்டுத்தாபனத்தின் மீதான தாக்கம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் (ஒப்பீட்டுக் காலப்பகுதியில் முன்னைய LKAS 39 கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டவாறு) குறிப்பு 34 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளது.

4. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

4.1.1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

கூட்டுத்தாபனம் பிரயோகித்த கணக்கீட்டுக் கொள்கைகள் SLFRS 15 மற்றும் SLFRS 9 ஆகியவற்றை முதன்முறையாக ஏற்றுக்கொண்டதனால் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் நீங்கலாக கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஏற்புடையவையாகும். கூட்டுத்தாபனம் திருத்தப்பட்ட மீள்கூற்று முறையைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பிப்பதால், ஒப்பீட்டுத் தொகைகள் நடைமுறை ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிட முடியாதவையாகும்.

4.1.2. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், 2015ஆம் ஆண்டில் தளபாடங்கள், பொறித்தொகுதி மற்றும் கணனிகள் ஆகியவை அரச பிரதி பிரதம மதிப்பீட்டாளரும் (ஓய்வுநிலை) இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகத்தின் முன்னாளர் உதவித் தலைவருமான திரு. ஜே.எம். சேனநாயக்க பண்டாரவினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. லால் நாணாயக்கார அன் கம்பனி, பட்டயக் கணக்காளர்கள் உண்மையாகக் கிடைக்கக்கூடியதாக உள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் கணனிகளை அடையாளம் கண்டு லேபல் இட்டு / குறியிட்டு 2015.12.31இல் இருந்தவாறு பௌதீக உறுதிப்படுத்தலை மேற்கொண்டனர்.

மீள்மதிப்பீட்டிலிருந்து எழுந்த மொத்தப் பற்றாக்குறை 26,978,382 ரூபா 2016ஆம் ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கில் இடப்பட்டது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவை திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட தேய்மான நட்டம், ஏதும் இருப்பின், கழித்த கிரயத்தில் கூறப்படுகின்றன. அத்தகைய கிரயம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆக்கக்கூறான பகுதிகளைப் பதிலீடு செய்கின்ற கிரயத்தையும் ஏற்பிசைவுப் பிரமாணங்கள் நிறைவேற்றப்படின், நீண்ட கால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான கடன்படல் கிரயங்களையும் உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் முக்கிய பாகங்கள் இடையிடையே பதிலீடுசெய்யப்படவேண்டுமாயின், கூட்டுத்தாபனம் பதிலீடு செய்யப்பட்ட பாகத்தை ஏற்பிசைவிலிருந்து நீக்கி, புதிய பாகத்தை அதன் சொந்தப் பயனுள்ள ஆயுட்காலத்துடனும் தேய்மானத்துடனும் அங்கீகரிக்கின்றது. அதேபோன்று, பாரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படும்போது, ஏற்பிசைவுப் பிரமாணங்கள் திருப்தியாக இருப்பின், அதன் கிரயம் ஒரு பதிலீடாக பொறித்தொகுதி மற்றும் ஆதனத்தின் கொண்டுசெல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய எல்லாத் திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்களும் வருமானக் கூற்றில் உறப்பட்டவையாக அங்கீகரிக்கப்படுகின்றன.

4.1.2.1. குத்தகை ஆதனம்

கூட்டுத்தாபனம் இரத்மலானையில் கந்தவல தோட்டம் 2 ஆம் பிரிவு என அழைக்கப்படும் காணியின் 1 தொடக்கம் 9 வரை அடையாளமிடப்பட்ட நிலக்கூறுகளை 1981 செப்டம்பர் 11 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 99 வருட குத்தகைக்குப் பெற்றது. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட குத்தகைக்கு காணியைப் பயன்படுத்துவதற்கான உரிமை பற்றிய உரிமைக்கான மாற்று நடாத்துகைக் கூற்றின் பிரகாரம், குத்தகை ஆதனத்தின் மீள்மதிப்பீட்டுத் தொகையை உள்ளிட்ட கொண்டு செல்லும் பெறுமதிக்கு எஞ்சிய குத்தகைக் காலத்தில் தேய்மானம் கழிக்கப்படுகின்றது.

குத்தகைக் காணி	2018 டிச. 31	2017 டிச. 31
	ரூபா	ரூபா
மதிப்பீடு	11,000,000	11,000,000
திரண்ட தேய்மானம்		
ஆரம்ப மீதி	1,120,000	960,000
ஆண்டுக்கான தேய்மானம்	160,000	160,000
ஆண்டிறுதியில் மீதி	1,180,000	1,120,000
கொண்டுசெல்லும் பெறுமதி	9,720,000	9,880,000

குத்தகை ஆதனம் வரலாற்றுக் கிரயத்தில் கூறப்பட்டிருப்பின், தேறிய ஏட்டுப் பெறுமதி பின்வருமாறு:

	2018 டிச. 31	2017 டிச. 31
	ரூபா	ரூபா
குத்தகைக் காணி		
கிரயம்	2,400,000	2,400,000
திரண்ட தேய்மானம்	896,969	872,727
கொண்டுசெல்லும் பெறுமதி	1,503,031	1,527,273

4.1.3. தேய்மானம்

ஆண்டின்போது கையேற்ற மற்றும் கையுதிர்த்த ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் மீது விகிதாசாரப்படுத்தப்பட்ட அடிப்படையில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

கட்டிடங்கள்	20 - 40 வருடங்கள்	பொறிகள், இயந்திரங்கள்	8 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	3 - 17 வருடங்கள்	பைசிக்கிள்கள்	6 - 7 வருடங்கள்
தளபாடங்கள், பொருத்தனைகள்	10 வருடங்கள்	கணனிகள்	4 வருடங்கள்
உபகரணங்கள்	5 வருடங்கள்		

4.1.4. நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

ஐந்தொகைத் திகதியில் மூலதனமாக்கப்படாத ஆண்டின் போது உறப்பட்ட மூலதனச் செலவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலையாகக் காட்டப்படுகின்ற அதேவேளை, ஆண்டின்போது மூலதனமாக்கப்பட்டவையும் பயன்படுத்தப்படுகின்றவையுமான சொத்துகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

4.1.5. அருவச் சொத்துகள்

வேறாகக் பெறப்பட்ட அருவச் சொத்துகள் கிரயத்தில் தொடக்கத்தில் ஏற்பிசைவுசெய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவைப் பின்பற்றி, அருவச் சொத்துகள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு, ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்த கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன. உள்வாரியாக ஈட்டிய அருவச் சொத்துகள், மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் நீங்கலாக, மூலதனமாக்கப்படாது, செலவினம் உறப்பட்ட ஆண்டில் வருமானக் கூற்றில் பிரதிபலிக்கின்றது.

கூட்டுத்தாபனத்தின் அருவச் சொத்துகளுக்கு கீழே தரப்பட்டவாறு அதன் உத்தேச பயன்மிக்க பொருளாதார ஆயுட்காலத்தில் பெறுமதி குறைத்தெழுதுவதற்கு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

கணனி மென்பொருள் 3 வருடங்கள்

4.1.6. நிதி சாராத சொத்துகளின் சேத இழப்பு

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கை செய்யும் திகதியிலும் ஒரு சொத்து சேத இழப்புக்கு உட்படக்கூடுமா என மதிப்பீடு செய்கின்றது. ஏதாவது குறிகாட்டிகள் காணப்படின், அல்லது ஒரு சொத்துக்கான வருடாந்த சேத இழப்புச் சோதனையொன்று தேவைப்படின், கூட்டுத்தாபனம் அந்தச் சொத்திலிருந்து பெறக்கூடிய தொகையை மதிப்பீடு செய்கின்றது.

4.1.7. வரிவிதிப்பு

4.1.7.1. நடப்பு வரிவிதிப்பு

நடப்பு வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் நடப்பாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் வரி அதிகாரிகளிடமிருந்து திரும்பப் பெறக்கூடியதென அல்லது அவர்களுக்குச் செலுத்தவேண்டியதென எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டுள்ளது. இத்தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் ஐந்தொகைத் தேதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவை அல்லது பொருளளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவையாகும்.

அதற்கிணங்க, வரிவிதிப்பு ஏற்பாடு 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கும் இணங்க வரிவிதிப்பு நோக்கங்களுக்காகச் சீராக்கப்பட்ட ஆண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. நடப்பாண்டு வரி விதிப்புக்கான ஏற்பாடு கணக்கீட்டு இலாபத்துக்கு இணங்க சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்கு அமைவாகச் செய்யப்பட்டது.

4.1.7.2. பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புகளுக்கும் சொத்துகளுக்கும் ஐந்தொகைத் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகளும் கவனத்தில்கொள்ளப்பட்டன. பிரதானமாக, நிதிக்கூற்றுகளில் நிலையான சொத்துகள், இளைப்பாற்றுப் பணிக்கொடை ஏற்பாடு, கடன்பெற்றவர்களின் சேத இழப்பு ஆகியவை கவனத்தில் கொள்ளப்பட்டன.

சரக்குத்தொக்குகள்

சரக்குத்தொக்குகள் "முதலில் வந்து முதலில் போகும்" என்ற அடிப்படையில் விலைமதிக்கப்பட்ட வழக்கிழந்த மற்றும் மெதுவாக அசைகின்ற இனங்களுக்கு உரிய ஒதுக்கீடு செய்த பின்னர், கிரயம் மற்றும் தேறிய கைவரக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைந்ததோ அதில் அங்கீகரிக்கப்படுகின்றன.

4.1.8. சரக்குத் தொக்குகளின் அளவீடு

4.1.9. சரக்குத்தொக்குகளின் கிரயம்

மூலப்பொருட்கள் - ORS

ஏதேனும் இடைநேர்விளைவான செலவுகளுடன் சேர்த்து கொள்வனவுகளின் கிரயம்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை

மூலப்பொருள் கிரயமும் மாறக்கூடிய முழுமையான உற்பத்திச் செலவுகளும்.

முடிவுப் பொருட்கள்

மூலப்பொருள் கிரயமும் மாறக்கூடிய முழுமையான உற்பத்திச் செலவுகளும்.

4.1.10. காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலும் வங்கியிலும் உள்ள காசு, திறைசேரி உண்டியல் முதலீடுகள், பன்னிரண்டு மாதங்கள் அதற்குக் குறைந்த ஆரம்ப முதிர்ச்சிகளைக்கொண்ட ஏனைய குறுகிய கால திரவநிலை முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. வங்கி மேலதிகப் பற்றுகள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புகளில் கடன்களினுள் காட்டப்படுகின்றன.

4.1.11. ஆய்வுக் கிரயங்கள்

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகள் மீதான செலவினம் அது உறப்படுகின்றபோது இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

5. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

5.1. இளைப்பாறல் பயன் கடப்பாடுகள்

5.1.1. வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - இளைப்பாற்றுப் பணிக்கொடை

கூட்டுத்தாபனம் 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை செலுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்தில் ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாக சேவையைப் பூர்த்தி செய்யும் போதுதான் ஓர் ஊழியருக்கான பணிக்கொடைப் பொறுப்பு எழுகின்றது. ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படும் இந்தப் பொறுப்பு ஐந்தொகைத் திகதியில் எதிர்பார்க்கப்படும் அலகுச் செலவுப் பதிவு முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட வரையறுத்த பயன் கடப்பாடுகளின் பெறுமதியைக் குறிக்கின்றது. இந்தப் பயன்கள் புற நிதியிடப்பட்டவையல்ல.

கூட்டுத்தாபனம் உடனடியாக ஏனைய விபரமான வருமானத்திலிருந்து எல்லா ஆயுட்கால இலாபங்களையும் அங்கீகரிக்கின்றது. கூட்டுத்தாபனம் உடனடியாக ஏனைய விபரமான வருமானத்திலிருந்து எல்லா ஆயுட்கால இலாபங்களையும் அங்கீகரிக்கின்றது. கூட்டுத்தாபனம் உடனடியாக ஏனைய விபரமான வருமானத்திலிருந்து எல்லா ஆயுட்கால இலாபங்களையும் ஏற்பிசைவு செய்கின்றது.

2018 டிசம்பர் 31இல் இருந்தவாறு ஆயுட்கால மதிப்பீடொன்று தொழில்சார் ஆயுட்கால மதிப்பீட்டாளராகிய "Messrs." Actuarial and Management Consultants (Pvt) Ltd.' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எம். பூபாலநாதன் AIA யினால் மேற்கொள்ளப்பட்டது. ஆயுட்கால மதிப்பீட்டாளரினால் வரையறுத்த பயனை மதிப்பிடுவதில் பின்வரும் ஊகங்களும் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன.

எதிர்பார்க்கப்படும் வருடாந்தச் சராசரி சம்பள உயர்வு வீதம்	-	5%
படி உயர்வு வீதம்	-	10%
கழிவு வீதம் / வட்டி வீதம்	-	11.5
பணியாளர் புரள்வுக் காரணி	-	2%
இளைப்பாறும் வயது	-	60 வருடங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதி

கூட்டுத்தாபனம் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பங்களிப்புச் செய்கின்றது. ஊழியர்களை உள்ளடக்கும் திட்டங்களுக்கு பங்களிப்புகள் செய்வதற்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதி

கூட்டுத்தாபனமும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதிக்கு பிரயாணப் படி நீங்கலாக மொத்தச் சம்பளத்தின் முறையே 12% ஐயும் 10% ஐயும் பங்களிப்புச்செய்கின்றனர்.

ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

கூட்டுத்தாபனம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு பிரயாணப் படி நீங்கலாக மொத்தச் சம்பளத்தின் 3% ஐ பங்களிப்புச் செய்கின்றது.

6. வருமானக் கூற்று

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறை கூட்டுத்தாபனச் செயல்நிறைவேற்றத்தின் ஆகக்கூறுகளை நியாயமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அந்நடைமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

6.1.1. வருவாயை ஏற்பிசைவு செய்தல்

SLFRS 15 - வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களிலிருந்து வருவாய் என்பதன் பிரகாரம், ஐந்து கட்டங்களின் கீழ் கூட்டுத்தாபனம் வருவாயை ஏற்பிசைவு செய்து அளவிடுகின்றது. வருவாயின் அளவீடு வாடிக்கையாளருடன்

மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட பரிசீலனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் மூன்றாம் தரப்பின் சார்பாக சேகரிக்கப்பட்ட தொகைகளைத் தவிர்க்கின்றது. செயலாற்றக் கடப்பாடுகள் திருப்திப்படுத்தப்படுகின்றபோது கூட்டுத்தாபனம் வருவாயை ஏற்பிசைவு செய்கின்றது.

ஒப்பீட்டுக் காலப்பகுதியில், பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்குப் பாய்தல் சாத்தியமாக உள்ளபோதும் கொடுப்பனவு எப்போது மேற்கொள்ளப்படுகின்றது என்பதைப் பொருட்படுத்தாது, செலவிடப்பட்ட அல்லது செலவிடப்படவுள்ள வருவாய் மற்றும் சம்பந்தப்பட்ட கிரயங்கள் நம்பந்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக உள்ளபோதும் வருவாய் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளைக் கவனத்தில்கொண்டு கிடைத்த அல்லது கிடைக்கவுள்ள பரிசீலனையின் நடுப்பெறுமதியில் வருவாய் அளவிடப்படுகின்றது.

6.1.1.1.பண்டங்கள் மற்றும் சேவைகளின் தன்மை

கூட்டுத்தாபனம் அதன் வருவாயை ஈட்டும் பிரதான செயற்பாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட வருவாய் ஏற்பிசைவுக் கொள்கைகளை பின்வரும் விபரம் வழங்குகின்றது.

i. மருந்துப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களின் இறக்குமதியிலிருந்து வருவாய்

கூட்டுத்தாபனம் பின்வரும் மூலங்களிலிருந்து வருவாயை ஏற்பிசைவு செய்கின்றது.

வாடிக்கையாளர் செயலாற்றத் திருப்தியின் தன்மை, காலத்திட்டம் மற்றும் முக்கியமான கொடுப்பனவு நியதிகள்

வினியோகத்தர் / தனியுரிமம் பெற்ற விற்பனையாளர்	உற்பத்திகளின் உரித்தை வாடிக்கையளார் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனம் மாதாந்தம் வருவாயை ஏற்பிசைவு செய்கின்றது. கூட்டுத்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் வினியோகத்தருக்கு தெரிவிக்கப்படும் விலைகளில் உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தினால் விற்பனை செய்யப்படும் உற்பத்திகள் வழங்கப்படும் நேரத்தில் பழுதடைந்திருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டாலன்றி அல்லது தவறொன்றின் காரணமாக வினியோகத்தருக்கு தவறான உற்பத்திகள் வழங்கப்பட்டிருந்தாலன்றி, அவை மீளப் பெறப்படவோ அல்லது பதிலீடுசெய்யப்படவோமாட்டாது. கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்துள்ள உற்பத்திகளின் பெறுமதிக்குச் சமனான மீளப்பெற முடியாத நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுதல் வேண்டும். வங்கி உத்தரவாதம் உடன்படிக்கை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து இருபத்தாறு (26) மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் என்பதுடன் இந்த உடன்படிக்கை தொடரும் காலப்பகுதியில் அது முழுமையாக வலுவில் இருக்கும்.
படைகள் / அரசாங்க வைத்தியசாலைகள் / தனியார் வைத்தியசாலைகள்	வாடிக்கையாளருக்கு உற்பத்திகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் கூட்டுத்தாபனம் மாதாந்தம் வருமானத்தை ஏற்பிசைவு செய்கின்றது. கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கப்படும் விலையில் உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனை செய்யப்படும் உற்பத்திகள் பழுதடைந்திருந்தால் அல்லது நிறம் மாறியிருந்தால் அல்லது தவறொன்றினால் பிழையான உற்பத்திகள் வழங்கப்பட்டிருந்தாலன்றி அவை திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு உற்பத்திகள் பதிலாக வழங்கப்படவோமாட்டாது.

ii. சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மருந்துப் பொருட்களையும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களையும் வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருவாய்

சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு உற்பத்திகள் கைமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் உற்பத்திகள் பழுதடைந்திருந்தால் அல்லது நிறம் மாறியிருந்தால் அல்லது தவறொன்றினால் பிழையான உற்பத்திகள் வழங்கப்பட்டிருந்தாலன்றி அவை திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு உற்பத்திகள் பதிலாக வழங்கப்படவோமாட்டாது.

iii. மருந்துப்பொருட்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பொருட்களின் உற்பத்தி

கூட்டுத்தாபனம் பின்வரும் மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

- ஜீவனி
- குளுக்கோஸ்
- பென்சைல் பென்சோவேற் கிறீம்

உற்பத்திகள் கைமாற்றப்படும் சந்தர்ப்பத்தில் உற்பத்திகளின் விற்பனை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் உற்பத்திகள் பழுதடைந்திருந்தால் அல்லது நிறம் மாறியிருந்தால் அல்லது தவறொன்றினால் பிழையான உற்பத்திகள் வழங்கப்பட்டிருந்தாலன்றி அவை திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு உற்பத்திகள் பதிலாக வழங்கப்படவோமாட்டாது.

வருவாயை ஏற்பிசைவு செய்வதற்கு முன்னர் கூட்டுத்தாபனம் பின்வரும் குறிப்பான ஏற்பிசைவுப் பரிமாணங்களையும் மதிப்பிடுகின்றது.

6.1.1.2.திருப்பிக் கொடுப்பதற்கான உரிமையுடன் விற்பனை

கூட்டுத்தாபனம் பின்வரும் சந்தர்ப்பங்களில் திருப்பிக் கொடுப்பதற்கான உரிமையுடன் உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்குக் கைமாற்றுகின்றது.

- விற்பனை செய்யப்பட்ட உற்பத்திகள் காலாவதியை நெருங்கியிருத்தல்
- உற்பத்திகள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பழுதடைந்திருந்தல் அல்லது நிறம் மாறியிருத்தல்
- தவறொன்றின் காரணமாக பிழையான உற்பத்திகள் வழங்கப்பட்டிருத்தல்

திருப்பிக் கொடுப்பதற்கான உரிமையைக் கொண்ட அத்தகைய உற்பத்திகள் பின்வருமாறு கூட்டுத்தாபனத்தினால் ஏற்பிசைவு செய்யப்படும்.

- கூட்டுத்தாபனம் உரித்தைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கும் பரிசீலனைத் தொகையில் கைமாற்றப்பட்ட உற்பத்திகளின் வருவாய்; மற்றும்
- மீள நிதியை வழங்கும் பொறுப்பின் மீதமைவாக வாடிக்கையாளரிடமிருந்து உற்பத்திகளை அறவிடுவதற்கான ஒரு சொத்து (விற்பனைக் கிரயத்தில் ஏற்புடைய சீராக்கம்)

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும், அவசியமெனின், கைமாற்றப்பட்ட உற்பத்திகளுக்குப் பதிலாக உரித்தாக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்கான அதன் மதிப்பீட்டை கூட்டுத்தாபனம் இற்றைப்படுத்தும்.

மீளளிப்புத் தொகை பற்றிய எதிர்பார்ப்புகளில் பதிலீடாக ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் இறுதியிலும் மீளளிப்புப் பொறுப்பின் அளவீட்டை கூட்டுத்தாபனம் இற்றைப்படுத்தும். ஏற்புடைய சீராக்கங்களை கூட்டுத்தாபனம் வருவாயாக (அல்லது வருவாய் குறைப்பாக) ஏற்பிசைவு செய்யும்.

மீள்நிதியளிப்புப் பொறுப்பை தீர்த்த பின்னர் வாடிக்கையாளரிடமிருந்து உற்பத்திகளை பெறுவதற்கான கூட்டுத்தாபனத்தின் உரித்தாக ஏற்பிசைவு செய்யப்படும் ஒரு சொத்து அந்த உற்பத்தியை மீளப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் ஏதேனும் கிரயத்தைக் கழித்து முன்னைய கொண்டுசெல்லும் தொகைக்கு ஏற்ப ஆரம்பத்தில் அளவிடப்படும். ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும், திருப்பி அனுப்பப்படவேண்டிய உற்பத்திகள் பற்றிய எதிரிபார்ப்புகளில் மாற்றங்களிலிருந்து எழும் சொத்துகளின் அளவீட்டை கூட்டுத்தாபனம் இற்றைப்படுத்துதல் வேண்டும்.

6.1.1.3. ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

6.1.1.4.வழங்குனர்களிடமிருந்து வருமதியான கோரல்கள்

மேலதிக களஞ்சியப்படுத்தல், தாமதக் கட்டணங்கள், குறைவான வழங்கல் மற்றும் சேதங்களுக்காக வழங்குனரிடமிருந்து கிடைக்க வேண்டிய கோரல்கள் வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை காரணமாக நிதிக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படவில்லை. எனினும், வருமானம் கைவரப்பெறுதல் நிச்சயமாயின், கோரல் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

கூட்டுத்தாபனம் திருத்தப்பட்ட மீள்கூற்று முறையைப் பயன்படுத்தி SLFRS 15 ஐ பிரயோகித்துள்ளது. எனவே, ஒப்பீட்டுத் தகவல் மீளக் கூறப்படாது LKAS 18 இன் கீழ் தொடர்ந்தும் அறிக்கைசெய்யப்படுகின்றது. கணக்கீட்டுக் கொள்கைகளின் விபரங்கள் SLFRS 15 இன் கீழ் உள்ளவற்றிலிருந்து வேறுபடின், LKAS 18 இன் கீழ் புறம்பாக வெளிப்படுத்தப்படுவதுடன் மாற்றங்களின் தாக்கம் குறிப்பு 8அ வில் வெளிப்படுத்தப்படுகின்றது.

6.1.2. செலவுகள்

வணிகத்தை நடத்துவதற்கு ஏற்படும் எல்லாச் செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தைத் தீர்மானிக்கும்போது வருமானத்தில் பொறுப்பாக்கப்படுகின்றது. திருத்தங்களும் புதுப்பித்தல்களும் செலவினம் ஏற்பட்ட ஆண்டில் இலாப நட்டத்தில் பொறுப்பாக்கப்படுகின்றது.

6.1.3. நிதிச் செலவுகள்

கருதப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்கு தயார்செய்வதற்கு அவசியமானவாறு கணிசமான காலத்தை ஏடுக்கும் சொத்தொன்றின் கொள்வனவு, நிர்மாணம் மற்றும் உற்பத்தியுடன் தொடர்பான நேரடி கடன்படல் கிரயங்கள் சம்பத்தப்பட்ட சொத்துகளின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய எல்லா கடன் கிரயங்களும் அவை நிகழ்ந்த காலப்பகுதியில் செலவில் இடப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவுகள் மேலதிகப்பற்று வட்டி, நாணயக் கடிதம் திறத்தல் செலவுகள் மற்றும் கடன் வசதி உடன்படிக்கை கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

6.1.4. மேந்தலைகளுக்கு இடையிலான ஒதுக்கீடு

சம்பந்தப்பட்ட செயற்பாடுகளைப் பகுப்பாய்வுசெய்த பின்னர் சத வீதத்தின் அடிப்படையில் ளீஊ மற்றும் னுர்ளு ஆகியவற்றுக்கிடையில் மேந்தலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகளில், மேந்தலைகள் ஒதுக்கீட்டு முறைமை பின்வருமாறு:

	DHS	SPC
(அ) தனிப்பட்ட வேதனங்கள்	56%	44%
(ஆ) பிரயாணச் செலவுகள்	10%	90%
(இ) வழங்கல்கள் மற்றும் தேவைப்பாடுகள்	25%	75%
(ஈ) திருத்தங்களும் பராமரிப்பும்	50%	50%
(உ) போக்குவரத்து, தொடர்பாடல் பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள்	50%	50%
(ஊ) ஆய்வுச் செலவு	65%	35%
(எ) மேலதிகப்பற்று வட்டி	உண்மையாது	உண்மையானது

7. நிதிக் கருவிகள் - ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் அதற்குப் பிந்திய அளவீடு

7.1. ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

நிதிச் சொத்துகள் மற்றும் நிதிப்பொறுப்புகள் கருவியின் ஒப்பந்த ஏற்பாட்டின் ஒரு தரப்பாக நிறுவனம் ஆகின்றபோது ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. நிதிச் சொத்துகளின் வழக்கமான வழிவகை கொள்வனவுகளும் விற்பனைகளும் வணிகத் திகதியில் - சொத்தை கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யும் அல்லது விற்பனை செய்யும் திகதியில் - ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

ஆரம்ப ஏற்பிசைவின் போது, கூட்டுத்தாபனம் நிதிச் சொத்துகளின் அல்லது நிதிப் பொறுப்புகளின் நடுநிலைப் பெறுமதியிலும் நடுநிலைப் பெறுமதியில் இல்லாத நிதிச் சொத்துகள் அல்லது நிதிப் பொறுப்புகளைப் பொறுத்தவரை, கூட்டி அல்லது கழித்தும் அதிகரிக்கின்றதும் நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பின் பெறுகை அல்லது வழங்கலுக்கு நேரடியாக சாட்டக்கூடியதுமான கொடுக்கல் வாங்கல் கிரயங்களையும் அளவிடுகின்றது.

7.1.1. நிதிச் சொத்துகள்

7.1.1.1.வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

2018 ஜனவரி 1 முதல், கூட்டுத்தாபனம் SLFRS 9 ஐ பிரயோகித்துள்ளதுடன் அதன் நிதிச் சொத்துகளை பின்வரும் அளவீட்டு வகுதிகளில் வகைப்படுத்துகின்றது:

- இலாபம் மற்றும் நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமதி (FVPL)
- ஏனைய விபரமான வருமானம் ஊடாக நடுநிலைப் பெறுமதி (FVOCI); அல்லது
- தேய்மானக் கிரயம்

கடன் மற்றும் உரிமைப்பங்கு கருவிகளுக்கான வகைப்படுத்தல் தேவைப்பாடுகள் கீழே விபரிக்கப்படுகின்றன.

- **கடன் கருவிகள்**

கடன் கருவிகள் வழங்குனரின் பார்வையில் நிதிப் பொறுப்பொன்றைப் பூர்த்தி செய்யும் கருவிகள் ஆகும். கடன் கருவிகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும் பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:

i. சொத்தை முகாமைத்துவம் செய்வதற்காக கூட்டுத்தாபனத்தின் வணிக மாதிரி மற்றும்

ii. சொத்தின் காசுப் பாய்ச்சல் சிறப்பம்சங்கள்

இந்தக் காரணிகளின் அடிப்படையில், கூட்டுத்தாபனம் அதன் கடன் கருவிகளை பின்வரும் மூன்று அளவீட்டு வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது.

7.1.1.1.1. தேய்மானக் கிரயம்

காசுப் பாய்ச்சல்கள் தனியாக முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளைப் (SPPI) பிரதிநிதித்துவப்படுமிடத்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலைச் சேகரிப்பதற்காக வைத்திருக்கும் சொத்துகளும் FVPL இற்காக ஒதுக்கப்பட்டவையும் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இந்த நிதிச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி "ஏனைய ஆரம்ப வருமானத்தில்" உள்ளடக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் தற்போது இந்த வகுதியின் கீழ் கையிலும் வங்கியிலும் உள்ள காசு, பணியாளர் கடன்கள், வணிக வருமதிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

7.1.1.1.2.ஏனைய விபரமான வருமானம் ஊடாக நடுநிலைப் பெறுமதி (FVOCI)

காசுப் பாய்ச்சல்கள் தனியாக முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளைப் (SPPI) பிரதிநிதித்துவப்படுமிடத்து ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலைச் சேகரிப்பதற்காக வைத்திருக்கும் சொத்துகளும் FVPL இற்காக ஒதுக்கப்படாதவையும் ஏனைய விபரமான வருமானம் ஊடாக (FVOCI) நடுநிலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் சேத இழப்பு வருவாய் அல்லது நட்டங்கள், வட்டி வருவாய் மற்றும் கருவியின் தேய்மானக் கிரயத்தில் அந்நியச் செலாவணி வருவாய்கள் மற்றும் நட்டங்கள் நீங்கலாக கொண்டு செல்லும் தொகைகளில் நகர்வுகள் OCI ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. நிதிச் சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படும்போது, முன்னர் OCI யில் ஏற்பிசைவு செய்யப்பட்ட திரண்ட வருவாய் அல்லது நட்டம் உரிமைப் பங்கிலிருந்து நட்டத்துக்கு மீள் வகைப்படுத்தப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது. இந்த நிதிச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி "ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில்" உள்ளடக்கப்படுகின்றது. கூட்டுத்தாபனம் தற்போது இந்த வகுதியின் கீழ் எவ்வித நிதிச் சொத்தையும் கொண்டிருக்கவில்லை.

7.1.1.1.3. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நடுநிலைப் பெறுமதி

தேய்மானக் கிரயம் அல்லது FVOCI இற்கான பிரமாணங்களைப் பூர்த்தி செய்யாத சொத்துகள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நடுநிலைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. பிரத்தியேகமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சமர்ப்பிக்கப்படும் பின்னர் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நடுநிலைப் பெறுமதியில் அளவிடப்படுவதும் இழப்புக்காப்புத் தொடர்பின் ஒரு பகுதியாக இல்லாததுமான ஒரு கடன் முதலீட்டின் மீதான வருவாய் அல்லது நட்டம் நடுநிலைப் பெறுமதியில் ஒதுக்கப்பட்ட கடனிலிருந்து எழாதபோது அல்லது அவை வியாபாரத்துக்காக வைத்துக்கொள்ளாதபோது அது நிகழும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சமர்ப்பிக்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

- **வணிக மாதிரி :**

காசுப்பாய்ச்சலை உருவாக்குவதற்காக கூட்டுத்தாபனம் சொத்துகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்கின்றது என்பதை வணிக மாதிரி பிரதிபலிக்கின்றது. அதாவது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் சொத்துகளிலிருந்து ஒப்பந்த காசுப் பாய்ச்சலை மாத்திரம் சேகரிப்பதா அல்லது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் மற்றும் விற்பனைச் சொத்துகளிலிருந்து எழும் காசுப் பாய்ச்சலைச் சேகரித்தல் ஆகிய இரண்டுமா என்பது. இந்த இரண்டுமே பொருத்தமற்றதாயின், (உதாரணமாக, நிதிச் சொத்துகளை வியாபார நோக்கத்துக்காக வைத்திருத்தல்), நிதிச் சொத்துகள் "ஏனைய" வணிக மாதிரியின் ஒரு பகுதியாக வகைப்படுத்தி FVPL இல் அளவிடப்படுகின்றது. சொத்துகளின் ஒரு தொகுதிக்கான வணிக மாதிரியை நிர்ணயிப்பதில் கூட்டுத்தாபனத்தினால் கவனத்தில் கொள்ளப்படும் காரணிகள் இந்தச் சொத்துகளுக்கான காசுப் பாய்ச்சல்கள் எவ்வாறு சேரிக்கப்பட்டன, பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு இந்தச் சொத்துகளுக்கான காசுப் பாய்ச்சல்கள் எவ்வாறு சொத்தின் செயலாற்றம் மதிப்பிடப்பட்டு அறிக்கை செய்யப்படுகின்றது, இடர்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன மற்றும் முகாமையாளர்களுக்கு எவ்வாறு நட்டஈடு வழங்கப்படுகின்றது போன்ற கடந்த கால அனுபவத்தை உள்ளடக்குகின்றது.

- **முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகள் மாத்திரம் (SPPI) :**

வணிக மாதிரி ஒப்பந்தக் காசுப் பாய்ச்சலைச் சேகரிப்பதற்கு சொத்துகளை வைத்திருத்தல் அல்லது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைச் சேகரித்து விற்பனை செய்தலாக இருக்குமிடத்து, நிதிக் கருவிகள் காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிபலிக்கின்றதா என கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது (SPPI சோதனை). இந்த மதிப்பீட்டை மேற்கொள்வதில், ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் அடிப்படைக் கடன் வழங்கல் ஒழுங்குடன் ஏற்புடையதா என, அதாவது, பணத்தில் காலப் பெறுமதி, கடன் இடர், ஏனைய அடிப்படைக் கடன் இடர்கள் மற்றும் அடிப்படைக் கடன் வழங்கல் ஒழுங்குடன் ஏற்புடைய இலாப எல்லை ஆகியவற்றை வட்டி உள்ளடக்குகின்றதா என்பதை கூட்டுத்தாபனம் பரிசீலிக்கும். அடிப்படை கடன் வழங்கல் ஒழுங்குக்குப் பொருத்தமற்ற இடரை அல்லது மாற்றத்தை ஒப்பந்த நியதிகள் அறிமுகப்படுத்துமிடத்து, தொடர்பான நிதிச் சொத்து இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலைப்பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டு அளவிடப்படுகின்றது.

சொத்துகளை முகாமைத்துவம் செய்வதற்கான வணிக மாதிரி மாறுகின்றபோது மாத்திரம் கூட்டுத்தாபனம் கடன் முதலீடுகளை மீள்வகைப்படுத்துகின்றது. மாற்றத்தைத் தொடர்ந்து முதலாவது அறிக்கை செய்யும் காலப்பகுதி ஆரம்பித்ததிலிருந்து மீள்வகைப்படுத்தல் இடம்பெறுகின்றது. அத்தகைய மாற்றங்கள் அடிக்கடி நிகழாதவையாகவும் அந்தக் காலப்பகுதியில் எதுவும் நிகழவில்லை எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

7.1.1.2.சேத இழப்பு

தேய்மானக் கிரயத்திலும் FVOCI இலும் கொண்டுசெல்லப்படும் கடன் கருவிச் சொத்துகளுடன் தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட கடன் இடர்களை முன்னோக்கிப் பார்க்கும் அடிப்படையில் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் அத்தகைய நட்டங்களுக்கு நட்ட ஏற்பாட்டை ஏற்பாடு செய்கின்றது:

- சாத்தியமான விளைவுகளின் வீச்சை மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பக்கச் சார்பற்ற நிகழ்தகவு நிறையிடப்பட்ட தொகை
- பணத்தின் காலப் பெறுமதி மற்றும்
- அறிக்கைத் திகதியில் கடந்தகால நிகழ்வுகள், தற்போதைய நிலைமைகள் மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமைகளின் எதிர்வுகூறல்கள் தகாத செலவுகள் அல்லது முயற்சி இன்றி கிடைக்கக்கூடியதாக உள்ள நியாயமானதும் ஆதரவானதுமான தகவல்.

7.1.1.2.1. எதிர்பார்த்த கடன் நட்ட (ECL) ஏற்பாடு

தேய்மானக் கிரயத்திலும் FVOCI இலும் அளவிடப்படும் நிதிச் சொத்துகளுக்கான எதிர்பார்த்த கடன் இடர் ஏற்பாட்டின் அளவீடு எதிர்கால பொருளாதார நிலைமைகளையும் கடன் நடத்தையையும் பற்றிய சிக்கலான மாதிரிகளையும் கணிசமான ஊகங்களையும் தேவைப்படுத்தும் ஒரு விடயப்பரப்பாகும். (உதாரணம்: வாடிக்கையாளர்கள் தவணை தவறுதல் மற்றும் அதன் விளைவான நட்டங்களின் சாத்தியம்) பின்வருபவை போன்ற ECL களை அளவிடுவதற்கான கணக்கீட்டுத் தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதில் பல கணிசமான தீர்மானங்களும் தேவைப்படுகின்றன:

- கடன் இடர் கணிசமாக அதிகரிப்பதை நிர்ணயிப்பதற்கான பிரமாணம்
- ECL இன் அளவீட்டுக்காக பொருத்தமான மாதிரிகளையும் ஊகங்களையும் தெரிவுசெய்தல்
- ஒவ்வொரு வகையான உற்பத்திக்கும் / சந்தைக்கும் தொடர்பான ECL இற்கும் முன்னோக்கி எதிர்பார்க்கும் சூழ்நிலைகளின் பல தொடர்பான நிறையிடல்களைத் தாபித்தல் மற்றும்
- ECL ஐ அளவிடும் நோக்கங்களுக்காக ஒத்த நிதிச் சொத்துகளின் தொகுதியைத் தாபித்தல்.

ECL அளவீட்டுக்காக கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் பின்வருமாறு:

- தவணை தவறுகைக்கான நிகழ்தகவு (PD), நட்டம் வழங்கப்பட்ட தவணை தவறுகை (LGD) மற்றும் பொருளாதாரக் காரணிச் சீராக்கம் (EFA) ஆகியவற்றின் கழிவிடப்பட்ட உற்பத்தி எதிர்பார்த்த கடன் இடர் ஆகும். அடுத்த 12 மாதங்களில் அல்லது கடப்பாட்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் கடனாளி நிதியியல் கடப்பாட்டில் தவணை தவறுதலை PD பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
- ஒரு தவணை தவறுதல் மீதான நட்டத்தின் அளவு பற்றிய கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்ப்பை LGD பிரதிநிரித்துவப்படுத்துகின்றது. கடனின் எஞ்சியுள்ள எதிர்பார்ப்புக் காலப்பகுதியில் தவணை தவறுகை இடம்பெறின், எதிர்பார்க்கப்படும் நட்டத்தின் சதவீதம் ஆயுட்கால LGD ஆகக் காணப்படுமிடத்து, ஆயுட்கால அடிப்படையில் LGD கணிக்கப்படுகின்றது.
- கூட்டுத்தாபனம் 8 வருடங்களுக்கான வரலாற்று ரீதியான பொருளாதார வளர்ச்சித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 5 வருடங்களுக்கான பொருளாதார வளர்ச்சியை எதிர்வுகூறுவதுடன் கூட்டுத்தாபனத்தின் மீது பொருளாதாரத் தாக்கத்தின் நிறையிடப்பட்ட நிகழ்தகவைப் பயன்படுத்தி பொருளாதாரக் காரணி சீராக்கம் (EFA) மேற்கொள்ளப்படுகின்றது. பிரதான வாடிக்கையாளர்களின் தன்மை காரணமாக கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான காரணியாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி EFA இற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

7.1.1.3. ஏற்பிசைவிலிருந்து நீக்குதல்

சொத்துகளிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகின்றபோது, அல்லது அவை மாற்றப்பட்டு, (i) உடைமையின் எல்லா இடர்களையும் வழங்கல்களையும் கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் மாற்றுகின்றபோது, அல்லது (ii) சொத்தின் உடைமை மற்றும் கடடுப்பாட்டின் எல்லா இடர்களையும் வழங்கல்களையும் கணிசமான அளவில் கூட்டுத்தாபனம் மாற்றாமலும் தன்வசம் வைத்திருக்காமலும் உள்ளபோது, நிதிச் சொத்துகள் அல்லது அதன் ஒரு பகுதி ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது.

சொத்துகளிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமைகளை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளபோது, அது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. ஆனால், ஏனைய நிறுவனங்களுக்கு அந்தக் காசுப்பாய்ச்சல்களை செலுத்துவதற்கான ஒப்பந்த ரீதியான கடப்பாட்டைக் கருதி, எல்லா இடர்களையும் வழங்கல்களையும் கணிசமான அளவில் மாற்றுகின்றது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்ற "ஊடு செல்லும்" (pass through) மாற்றமாக கணக்கில் கொள்ளப்படுகின்றன.

- சொத்துகளிலிருந்து சமமான தொகைகளைச் சேகரிக்காதவிடத்து, கொடுப்பனவை மேற்கொள்வதற்கான கடப்பாடு இல்லை
- சொத்துகளை விற்பனை செய்வதிலிருந்து அல்லது வாக்குறுதியளிப்பதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது மற்றும்
- அது ஏனைய சொத்துகளிலிருந்து சேகரிக்கும் ஏதேனும் காசை சாதன தாமதமின்றி அனுப்பிவைப்பதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

7.1.2. நிதிப் பொறுப்புகள்

7.1.2.1.வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

தற்போதைய மற்றும் முன்னைய காலப்பகுதியில், இலாபம் மற்றும் நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் நீங்கலாக, நிதியியல் பொறுப்புகள் பின்னர் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. இந்த வகைப்படுத்தல் துணை அம்சங்கள் (derivatives), வணிகத்துக்காக வைத்திருக்கும் நிதிப் பொறுப்புகள் மற்றும் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்தவாறு அத்தகைய ஏனைய ஒதுக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள் ஆகியவற்றுக்கு பிரயோகிக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமதியில் ஒதுக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள் மீதான வருவாய்கள் அல்லது நட்டங்கள் சந்தை இடருக்கும் பகுதியளவில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் (பொறுப்பின் நடுநிலைப் பெறுமதியில் எஞ்சியுள்ள மாற்றத்தின் அளவு) அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்றதுமான சந்தை நிலைமைகளில் மாற்றங்களுக்கு சாட்டக்கூடிய தொகையாக நிர்ணயிக்கப்படும் பொறுப்பின் கடன் இடரில் மாற்றத்துக்கு சாட்டக்கூடிய நிதிப் பொறுப்பின் நடுநிலைப் பெறுமதியில் மாற்றத் தொகையில், அதாவது ஏனைய விரிவான வருமானத்தில் பகுதியளவு சமர்ப்பிக்கப்படுகின்றன. அத்தகைய சமர்ப்பித்தல் கணக்கீட்டு ஒவ்வாமை ஒன்றை ஏற்படுத்துகின்றபோது அல்லது விரிவாக்கும்போது பொறுப்பின் கடன் இடருக்கு சாட்டக்கூடிய வருவாய்கள் மற்றும் நட்டங்களும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிப் பொறுப்புகள் வணிக மற்றும் ஏனைய சென்மதிகள், வங்கி மேலதிகப் பற்றுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

7.1.2.2. ஏற்பிசைவிலிருந்து நீக்குதல்

ஒரு நிதிப் பொறுப்பு பூர்த்தியடைகின்றபோது (அதாவது, ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடு நிறைவேற்றப்படும்போது, இரத்துச்செய்யப்படும்போது அல்லது காலாவதியாகின்றபோது) அது ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது.

7.2. அளவீட்டு முறைகள்

தேய்மானக் கிரயம் மற்றும் பயனுறுதியான வட்டி வீதம்

ஆரம்ப ஏற்பிசைவில் நிதிச் சொத்தை அல்லது நிதிப் பொறுப்பை அளவிட்டு, முதல் கொடுப்பனவுகளைக் கழித்து, ஆரம்பத் தொகைக்கும் முதிர்ச்சித் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டின் பயனுறுதியான வட்டி முறையைப் பயன்படுத்தி திரண்ட தேய்மானத்தைக் கூட்டி அல்லது கழித்து, நிதியியல் சொத்துகளுக்கு ஏதேனும் நட்ட ஏற்பாட்டுக்கு சீராக்கம் செய்வதே தேய்மானக் கிரயம் ஆகும்.

நிதிச் சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகைக்கு (அதாவத, ஏதேனும் சேத இழப்பு ஏற்பாட்டுக்கு முன்னர் அதன் தேய்மானக் கிரயம்) அல்லது நிதிப் பொறுப்பின் தேய்மானக் கிரயத்துக்கு நிதிச் சொத்தின் அல்லது பொறுப்பின் எதிர்பார்த்த ஆயுட்காலத்தில் உத்தேச எதிர்கால காசுக் கொடுப்பனவுகளுக்கு அல்லது பெறுகைகளுக்கு மிகச் சரியாகக் கழிவிட்ட வீதமே பயனுறுதியான வட்டி வீதமாகும்.

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்

குறிப்பு 8

வருமானம்	2018 ரூபா	2017 ரூபா
வருவாய் - SPC		
மொத்த வர்த்தகம்	2,567,562,214	2,477,326,454
ORS விற்பனைகள்	102,989,475	115,799,633
ஒசுசல விற்பனைகள்	4,761,113,560	3,971,193,491
கைவரப்பெறாத இலாபத்துக்கு ஏற்பாடு	(15,067,318)	(6,694,960)
கடன் காப்புறுதி	1,887,969	1,765,594
வழங்குனர்களின் கோரிக்கைகள்	39,834,675	34,010,744
மொத்தம்	**7,458,320,575**	**6,593,400,956**
வருவாய் - DHS		
இறக்குமதி வழங்கல்கள்	17,942,708,792	18,025,527,483
உள்நாட்டு வழங்கல்கள்	8,015,266,843	7,604,857,767
CPU வழங்கல்கள்	5,072,292,258	-
வழங்குனர்களிடமிருந்து கிடைத்த கோரல்கள்	349,972,173	339,905,167
தாமதித்த வழங்கல்களுக்கான தண்டங்கள்	56,745,892	-
மொத்தம்	**31,436,985,958**	**25,970,290,418**
மொத்த வருவாய்	**38,895,306,533**	**32,563,691,374**

திருப்பலுக்கான உரிமையுடன் விற்பனை குறிப்பு 8அ

விற்பனையுடன் ஒப்பிடும்போது விற்பனைத் திரும்பல்கள் ஒரு பொருட்டல்ல. எனினும், விற்பனைத் திரும்பல் நிகழ்வுகளின் சாத்தியங்களையும் அத்தகைய சாதன தாக்கத்தை சீராக்குவதையும் கூட்டுத்தாபனம் கண்காணிக்கும்.

விற்பனைக் கிரயம் / நேரடிச் செலவுகள் குறிப்பு 09

நேரடிச் செலவுகள் - DHS	2018 ரூபா	2017 ரூபா
வருவாய்	**31,436,985,958**	**25,970,290,418**
நேரடிக் கிரயம்		
DHS வழங்கல்கள் C & F பெறுமதி	16,179,994,614	16,455,725,318
சுங்கத் தீர்வைகளும் வரிகளும்	455,574,179	444,831,083
உள்நாட்டு வழங்கல்களின் கிரயம்	7,715,060,316	7,313,131,719
DHS இற்கான CPU கொள்வனவுகள	4,877,204,094	-
மொத்தம்	**29,227,833,203**	**24,213,688,120**
விடுவித்தல் கட்டணம் (வங்கி, முத்திரை, தரகு போன்றவை)	269,174,820	265,781,348
இறக்குதல் கட்டணம்	27,100,728	31,669,757
இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணம்	40,841,939	10,782,684
மொத்தம்	**337,117,486**	**308,233,788**
கழிக்க: இடைப்போக்கிலுள்ள இருப்பு	253,016,979	438,657,925
நேரடிச் செலவுகள் / விற்பனைக் கிரயம்	**29,311,933,710**	**24,083,263,984**
மொத்த இலாபம் / மிகை	**2,125,052,248**	**1,887,026,434**

குறிப்பு 10

விற்பனைக் கிரயம் - ஸ்ரீலை	மொத்த வியாபாரம் ரூபா	ஒசுசல வியாபாரம் ரூபா	மொத்த வியாபாரம் SPC-2018 ரூபா	மொத்த வியாபாரம் SPC-2017 ரூபா
ஆண்டின் தொடக்கத்தில் வியாபார இருப்பு	987,908,212	773,931,152	1,761,839,364	1,870,806,566
கூட்டுக :				
இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள்	2,665,737,168		2,665,737,168	1,953,899,794
ஆய்வுகூட நுகர்வுகள்	3,088,247		3,088,247	2,903,123
உள்நாட்டுக் கொள்வனவு (SPC கேள்விகள்)	1,247,979,355		1,247,979,355	922,397,459
C.P.U - கொள்வனவுகள்	521,171,149		521,171,149	269,941,302
உள்நாட்டுக் கொள்வனவுகள் (ஒசுசல)	-	2,132,303,865	2,132,303,865	1,700,598,981
மாற்றல்கள்	(1,978,852,611)	1,978,852,611	-	-
விற்பனைக்குக் கிடைத்த இருப்பு	**3,447,031,520**	**4,885,087,628**	**8,332,119,149**	**6,720,547,226**
கழிக்க: ஆண்டிறுதியில் வியாபார இருப்பு	1,849,440,302	923,792,242	2,773,232,544	1,888,344,565
	1,597,591,219	**3,961,295,386**	**5,558,886,605**	**4,832,202,660**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானம்

ரூபா

விற்பனைக் கிரயம்	ஒசுசல வியாபாரம் கொழும்பு - 07	ஒசுசல வியாபாரம் கொழும்பு - 04	ஒசுசல வியாபாரம் கொழும்பு - 01	ஒசுசல வியாபாரம் கண்டி	ஒசுசல வியாபாரம் நுகேகொட	ஒசுசல வியாபாரம் அவிசாவளை	ஒசுசல வியாபாரம் இரத்தினபுரி	ஒசுசல வியாபாரம் மினுவாங்கொட	ஒசுசல வியாபாரம் பாணந்துறை	ஒசுசல வியாபாரம் காலி	ஒசுசல வியாபாரம் மாத்தறை	ஒசுசல வியாபாரம் குருணாகலை	ஒசுசல வியாபாரம் அம்பாறை	ஒசுசல வியாபாரம் அம்பாந்தோட்டை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வியாபார இருப்பு														
ஆண்டின் ஆரம்பத்தில்	117,589,031	22,762,074	39,241,303	56,501,730	41,837,024	16,001,553	17,884,059	11,484,333	20,392,066	20,007,011	16,662,871	38,301,153	9,634,798	7,356,908
உள்நாட்டுக் கொள்வனவுகள்	695,330,810	316,178,068	84,651,004	201,527,628	47,435,534	16,382,837	26,865,317	12,083,032	42,322,119	29,232,927	31,159,686	61,037,767	7,254,976	23,029,327
மாற்றல்கள்	265,852,567	124,078,246	68,316,073	111,092,919	61,348,270	41,423,004	48,554,411	23,981,452	52,696,721	53,454,829	41,935,022	71,178,848	67,081,167	26,206,716
விற்பனைக்குக் கிடைத்த சரக்கு	**1,078,772,409**	**463,018,388**	**192,208,380**	**369,122,277**	**150,620,828**	**73,807,394**	**93,303,787**	**47,548,818**	**115,410,906**	**102,694,766**	**89,757,580**	**170,517,767**	**83,970,942**	**56,592,950**
ஆண்டிறுதியில் வியாபார இருப்பு	114,203,916	68,614,205	43,552,858	60,075,394	34,278,881	15,697,128	20,659,874	12,412,989	29,658,818	19,311,941	18,798,156	42,861,833	16,467,908	16,274,647
விற்பனைக் கிரயம், மாற்றல்கள்	**964,568,493**	**394,404,183**	**148,655,522**	**309,046,883**	**116,341,947**	**58,110,266**	**72,643,914**	**35,135,828**	**85,752,088**	**83,382,826**	**70,959,424**	**127,655,934**	**67,503,033**	**40,318,303**
மொத்த வியாபாரம்													-	
விற்பனைகள்	1,133,783,872	470,798,998	184,104,349	357,288,076	138,619,782	71,063,340	89,221,651	43,335,775	105,168,585	101,988,205	86,060,968	155,647,458	75,106,335	48,228,990
கழிக்க: விற்பனைக் கிரயம்	964,568,493	394,404,183	148,655,522	309,046,883	116,341,947	58,110,266	72,643,914	35,135,828	85,752,088	83,382,826	70,959,424	127,655,934	67,503,033	40,318,303
மொத்த வியாபார இலாபம்	**169,215,379**	**76,394,815**	**35,448,827**	**48,241,193**	**22,277,834**	**12,953,073**	**16,577,737**	**8,199,947**	**19,416,497**	**18,605,380**	**15,101,545**	**27,991,524**	**7,603,301**	**7,910,687**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானம்

குறிப்பு -10அ

விற்பனைக் கிரயம்	ஒசுசல வியாபாரம் அனுராதபுரம்	ஒசுசல வியாபாரம் மஹரகம	ஒசுசல வியாபாரம் ஜயவர்த்தனபுர	ஒசுசல வியாபாரம் கராப்பிட்டிய	ஒசுசல வியாபாரம் நிரகொழும்பு	ஒசுசல வியாபாரம் பதுளை சதொச	ஒசுசல வியாபாரம் தியத்தலாவ	ஒசுசல வியாபாரம் யாழ்ப்பாணம்	ஒசுசல வியாபாரம் பொலன்னறுவை	சதொச விற் நிலையம் இரத்மலானை	ஒசுசல வியாபாரம் தங்கல்ல	ஒசுசல வியாபாரம் நாகம	ஒசுசல வியாபாரம் பண்டாரவளை	ஒசுசல வியாபாரம் கோட்டை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வியாபார இருப்பு														
ஆண்டின் ஆரம்பத்தில்	18,617,409	24,471,466	34,591,436	27,047,892	12,975,001	15,767,442	4,487,924	14,970,820	19,487,005	2,307,620	13,899,179	16,163,772	8,347,415	8,921,007
உள்நாட்டுக் கொள்வனவுகள்	39,859,110	36,254,395	84,308,267	40,210,821	27,790,627	42,127,438	4,219,190	68,572,001	18,937,751	2,012,664	13,533,026	23,421,417	10,712,502	14,235,955
மாற்றல்கள்	58,132,760	51,044,477	66,252,442	54,463,026	43,900,005	50,838,279	13,449,626	29,833,507	62,772,900	6,949,815	22,089,201	58,172,353	26,744,489	27,035,451
விற்பனைக்குக் கிடைத்த சரக்கு	**116,609,280**	**111,770,338**	**185,152,146**	**121,721,738**	**84,665,633**	**108,733,160**	**22,156,739**	**113,376,329**	**101,197,656**	**11,270,100**	**49,521,406**	**97,757,543**	**45,804,407**	**50,192,413**
ஆண்டிறுதியில் வியாபார இருப்பு	23,876,895	27,678,376	30,274,543	30,782,562	12,014,534	22,589,214	5,208,089	17,507,378	23,416,489	2,314,461	17,890,800	19,366,915	9,447,372	11,106,222
விற்பனை ஆகுசெலவு, மாற்றல்கள்	**92,732,384**	**84,091,963**	**154,877,603**	**90,939,176**	**72,651,099**	**86,143,946**	**16,948,650**	**95,868,950**	**77,781,167**	**8,955,639**	**31,630,606**	**78,390,628**	**36,357,034**	**39,086,191**
மொத்த வியாபாரம்														
விற்பனைகள்	113,279,398	103,646,604	185,833,784	107,828,274	89,265,534	103,260,438	21,075,221	103,481,261	95,059,236	11,584,734	38,860,765	95,217,760	44,948,559	50,495,220
கழிக்க: விற்பனை கிரயம்	92,732,384	84,091,963	154,877,603	90,939,176	72,651,099	86,143,946	16,948,650	95,868,950	77,781,167	8,955,639	31,630,606	78,390,628	36,357,034	39,086,191
மொத்த வியாபார இலாபம்	**20,547,014**	**19,554,641**	**30,956,181**	**16,889,098**	**16,614,435**	**17,116,491**	**4,126,571**	**7,612,311**	**17,278,069**	**2,629,095**	**7,230,159**	**16,827,132**	**8,591,525**	**11,409,030**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒசுசல தொழிற்பாடுகளின் வருமானம்

குறிப்பு -10அ

விற்பனைக் கிரயம்	ஒசுசல வியாபாரம் பொரளை	ஒசுசல வியாபாரம் எம்பிலிப்பிட்டிய	ஒசுசல வியாபாரம் கண்டி - புகைநிலை.	ஒசுசல வியாபாரம் கம்பஹா	ஒசுசல வியாபாரம் நாகொட	ஒசுசல வியாபாரம் பேருவளை	ஒசுசல வியாபாரம் பிலியந்தலை	ஒசுசல வியாபாரம் நிந்தவூர்	ஒசுசல வியாபாரம் அக்கரைப்பற்று	ஒசுசல வியாபாரம் மொணராகலை	ஒசுசல வியாபாரம் பேராதெனிய	பிராந்திய களஞ்சியங்கள் கண்டி	ஒசுசல மொத்த வியாபார நடவடிக்கைகள்
	ரூபா	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**
வியாபார இருப்பு													
ஆண்டின் ஆரம்பத்தில்	11,622,021	11,055,354	7,364,518	12,588,295	14,043,536	12,728,342	13,054,102	9,749,104	-	-	-	24,014,579	773,931,152
உள்நாட்டுக் கொள்வனவுகள்	13,043,871	13,001,632	9,096,086	17,471,435	10,277,951	13,245,552	13,862,643	3,032,819	4,655,159	7,012,705	6,917,815	-	2,132,303,865
மாற்றல்கள்	27,850,946	24,642,274	34,587,281	37,304,484	24,502,843	18,605,935	17,046,216	9,608,275	9,666,095	25,564,230	20,965,801	99,629,652	1,978,852,611
விற்பனைக்குக் கிடைத்த சரக்கு	**52,516,838**	**48,699,260**	**51,047,885**	**67,364,215**	**48,824,330**	**44,579,829**	**43,962,962**	**22,390,198**	**14,321,254**	**32,576,936**	**27,883,616**	**123,644,230**	**4,885,087,628**
ஆண்டிறுதியில் வியாபார இருப்பு	7,502,034	11,842,302	12,401,405	12,605,585	16,255,413	14,577,404	15,116,028	6,432,790	7,856,366	17,830,541	14,547,573	20,482,405	923,792,242
விற்பனை ஆகுசெலவு, மாற்றல்கள்	**45,014,804**	**36,856,958**	**38,646,480**	**54,758,630**	**32,568,917**	**30,002,425**	**28,846,934**	**15,957,408**	**6,464,889**	**14,746,395**	**13,336,043**	**103,161,825**	**3,961,295,386**
மொத்த வியாபாரம்													
விற்பனைகள்	52,096,391	45,057,188	49,111,035	66,520,015	40,857,281	38,054,517	35,099,923	19,031,090	8,836,484	20,155,323	16,617,194	145,423,947	4,761,113,560
கழிக்க: விற்பனைக் கிரயம்	45,014,804	36,856,958	38,646,480	54,758,630	32,568,917	30,002,425	28,846,934	15,957,408	6,464,889	14,746,395	13,336,043	103,161,825	3,961,295,386
மொத்த வியாபார இலாபம்	**7,081,588**	**8,200,230**	**10,464,556**	**11,761,385**	**8,288,364**	**8,052,092**	**6,252,989**	**3,073,682**	**2,371,596**	**5,408,928**	**3,281,151**	**42,262,122**	**799,818,174**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்

குளுக்கோஸ், ஜீவனி மற்றும் டீடீ கிறீம் உற்பத்திக் கிரயம்

குறிப்பு 11

	2018 ரூபா	2017 ரூபா
மூலப்பொருட்களின் ஆரம்ப இருப்பு	671,326	1,086,686
கூட்டுக: மூலப்பொருட்கள் கொள்வனவு	25,551,471	24,089,587
கழிக்க: மூலப்பொருட்களின் இறுதி இருப்பு	1,648,357	671,326
நுகரப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம்	**24,574,440**	**24,504,947**
கூட்டுக: உற்பத்தி ஆகுசெலவு (10அ)	64,440,211	56,877,791
பொருட்களின் உற்பத்திக் கிரயம்	**89,014,651**	**81,382,739**

ORS வியாபாரம்	2018 ரூபா	2017 ரூபா
ஆரம்ப இருப்பு (முடிவுப் பொருட்கள்)	1,953,393	1,400,474
கூட்டுக: பொருட்களின் உற்பத்தி ஆகுசெலவு	89,014,651	81,382,739
கழிக்க: இறுதி இருப்பு (முடிவுப் பொருட்கள்)	1,917,263	1,953,393
விற்பனைக் கிரயம்	**89,050,781**	**80,829,820**
விற்பனைகள்	102,989,475	115,799,633
கழிக்க: விற்பனை ஆகுசெலவு	89,050,781	80,829,820
மொத்த இலாபம்	**13,938,694**	**34,969,814**

NOTE 11a

உற்பத்திக் கிரயம்	2018 ரூபா	2017 ரூபா
சம்பளங்கள், கூலிகள்	23,837,121	20,145,585
மேலதிக நேர வேலை	2,196,432	1,641,856
சீருடைகள்	15,870	121,439
பணியாளர் காப்புறுதி	182,808	38,426
சேமலாப நிதி (ஊ.சே.நி, ஊ.ந.நி)	2,834,583	2,354,115
வருடாந்த மிகையூதியம்	417,825	432,000
வரவு மிகையூதியம்	785,400	768,000
வருடாந்த ஊக்குவிப்பு மிகையூதியம்	4,689,249	3,213,199
பணியாளர் நலன்புரி	1,362,409	1,378,421
மருத்துவச் செலவுகள்	477,531	479,130
மின்வலு	3,584,128	3,437,282
தேய்வு	10,816,537	8,678,575
திருத்தங்களும் பராமரிப்பும்	911,676	2,151,522
பயன்படுத்திய பொதியிடல் பொருட்கள்	12,328,641	12,038,242
மொத்தம்	**64,440,211**	**56,877,791**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்

பிற தொழிற்பாட்டு வருமானம் **குறிப்பு - 12**

	2018 ரூபா	2017 ரூபா
கேள்விப்பத்திரங்கள் விற்பனை	48,844,896	32,345,910
கிடைத்த வாடகை	444,648	623,070
திறைசேரி உண்டியல் வட்டி	5,396,705	5,440,476
மிஞ்சுபொருள் விற்பனை	10,155	68,114
நிதி முகாமைத்துவ வருமானம்	-	1,687,847
நானாவித வருமானம்	4,923,686	4,207,528
விடுமுறை விடுதி வருமானம்	824,445	774,500
முன்தகுதிக் கட்டணம்	1,506,000	3,381,750
மாதிரி பரிசோதனை வருமானம்	2,929,849	2,103,193
கிடைத்த காப்புறுதிக் கோரல்	6,335,373	-
திரும்பிய காசோலை / தாமதங்கள் வட்டி	1,857,110	2,371,756
மொத்தம்	**73,072,867**	**53,004,143**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்

குறிப்பு 13

(அ) நிர்வாகச் செலவுகள்	SPC வியாபாரம்			மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்
	ஒசுசல வி.நி.	O.R.S.	பரும	SPC	DHS	2018	2017
ஆளணி ஊதியங்கள்	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
சம்பளம், கூலி, படிகள்	310,490,636	-	194,642,432	505,133,068	247,726,732	752,859,800	625,414,944
மேலதிக நேரம்	30,070,131	-	11,455,885	41,526,015	7,637,256	49,163,272	41,024,445
பணியாளர் பயிற்சிச் செலவுகள்	-	-	2,991,648	2,991,648	3,807,552	6,799,200	5,891,258
சீருடைகள்	2,568,115	-	906,950	3,475,065	1,154,301	4,629,366	4,422,756
பணியாளர் காப்புறுதி	3,033,755	-	2,961,127	5,994,883	3,768,708	9,763,590	8,929,532
சேமலாப நிதியம் (ஊ.ச.நி, ஊ.ந.நி)	36,785,915	-	22,872,962	59,658,877	29,111,042	88,769,919	75,328,265
வருடாந்த மிகையூதியம்	4,652,883	-	3,044,390	7,697,274	3,874,679	11,571,952	11,143,523
மாதாந்த வரவு மிகையூதியம்	9,670,000	-	4,704,282	14,374,282	5,987,268	20,361,550	19,887,950
விளையாட்டுக் கழகம்	-	-	845,326	845,326	1,075,870	1,921,196	2,309,328
ஆண்டு செயலூக்க மிகையூதியம்	57,249,026	-	38,471,248	95,720,275	48,963,407	144,683,682	90,231,636
பணிக்கொடை	-	-	17,939,611	17,939,611	22,832,233	40,771,844	32,216,995
காணி, வீட்டுக் கடன் வட்டி	3,829,884	47,979	2,892,437	6,770,300	3,681,283	10,451,583	9,160,234
ஏனை ஆண்டு விழாக் கொடுப்பனவு	-	-	704,059	704,059	896,075	1,600,134	3,673,496
மொத்தம்	**458,350,345**	**47,979**	**304,432,359**	**762,830,683**	**380,516,405**	**1,143,347,088**	**929,634,363**
பிரயாணச் செலவுகள்							
வெளி. பிரயாணம் - பணிப்பாளர்கள்	-	-	-	-	-	-	543,295
வெளி. பிரயாணம் - ஏனையோர்	-	-	1,098,567	1,098,567	122,063	1,220,630	1,899,162
உள். பிரயாணம் - ஏனையோர்	455,406	15,055	4,196,566	4,667,027	466,285	5,133,312	4,439,799
மொத்தம்	**455,406**	**15,055**	**5,295,133**	**5,765,594**	**588,348**	**6,353,942**	**6,882,256**
வழங்கல்களும் தேவைகளும்							
அச்சிடலும் எழுதுகருவிகளும்	6,450,712	27,419	15,006,288	21,484,419	5,002,096	26,486,515	20,951,042
சபைக் கூட்டச் செலவுகள்	-	-	41,630	41,630	13,877	55,506	74,510
விருந்துபசாரம் - ஏனையோர்	-	-	637,272	637,272	212,424	849,696	579,805
மோட்டார் வாகனத் திருத்தங்கள்	-	-	7,600,628	7,600,628	2,533,543	10,134,171	8,920,517
எரிபொருளும் உராய்வு நீக்கிகளும்	-	-	9,083,238	9,083,238	3,027,746	12,110,984	12,133,056
வாகன அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்	-	-	145,471	145,471	48,490	193,961	433,505
மொத்தம்	**6,450,712**	**27,419**	**32,514,526**	**38,992,657**	**10,838,175**	**49,830,832**	**43,092,436**
திருத்தங்களும் பராமரிப்பும்							
கட்டிடங்கள்	2,514,998	-	2,777,566	5,292,563	2,777,566	8,070,129	8,819,802
தளபாடம், பொருத்திகள், உபகரணங்கள்	2,990,921	-	2,090,263	5,081,184	2,090,263	7,171,447	5,941,969
கணனி	97,143	-	2,291,376	2,388,519	2,291,376	4,679,895	3,316,857
மொத்தம்	**5,603,061**	**-**	**7,159,205**	**12,762,266**	**7,159,205**	**19,921,471**	**18,078,629**

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

2018 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள்

குறிப்பு 13

(அ) நிர்வாகச் செலவுகள்	SPC வியாபாரம்			மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்	மொத்த வியாபாரம்
	ஒசுசல வி.நி.	O.R.S.	பரும	SPC	DHS	2018	2017
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள்							
கூட்டுத்தாபனத்தின் பிரதான நிதிப்பொறுப்புகள் கடன்படல்களையும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளையும் கொண்டுள்ளன. இந்நிதிப்பொறுப்புகளின் பிரதான நோக்கம் கூட்டுத்தாபனத் தொழிற்பாடுகளுக்கு நிதி வழங்குதலாகும். கூட்டுத்தாபனத்துக்கு அதன் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாக வருகின்ற வாத்தக மற்றும் ஏனைய வருமதிகள், காசு மற்றும் குறுகியகால வைப்புகள் என்பவை உள்ளன. கூட்டுத்தாபனம் கடன் இடர் மற்றும் திரவநிதி இடர் ஆகியவற்றை எதிர்நோக்குகின்றது. கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமை இவ்விடர்களின் முகாமைத்துவத்தைக் கண்காணிக்கின்றது.

இவ்விடர்கள் ஒவ்வொன்றையும் சமாளிப்பதற்கான கொள்கைகளைப் பணிப்பாளர் சபை மீளாய்வுசெய்து உடன்படுகின்றது. அவை கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன :

கடன் இடர்

வணிக வருமதிகள்

வாடிக்கையாளர் கடன் இடர் ஒவ்வொரு வணிக அலகினாலும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

	2018	2017
SPC	ரூபா. 878,860,394	ரூபா. 967,042,539
DHS	ரூபா. 16,998,983,680	ரூபா. 9,267,922,705

முக்கிய வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட அடிப்படையில் ஒவ்வோர் அறிக்கையிடும் தேதியிலும் தேய்மானத்துக்கான தேவை பகுப்பாய்வுசெய்யப்படுகின்றது. மேலதிகமாக பெருந்தொகையான சிறு வருமதிகள் ஓரினத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு அவை தேய்மானத்துக்குக் கூட்டாக மதிப்பீடுசெய்யப்படுகின்றன. இக்கணிப்பீடு உண்மையாக ஏற்பட்ட வரலாற்றுத் தரவை அடிப்படையாகக்கொண்டது. கூட்டுத்தாபனம் பிணையாக வங்கி உத்தரவாதங்களைப் பெறுகின்றது. மேலதிகமாக வங்கி உத்தரவாத எல்லையை விஞ்சிக் கடனுக்கு வாங்க விரும்புகின்ற வாடிக்கையாளர்களிடமிருந்து மிகைக் கட்டணமொன்று அறவிடப்படுகின்றது.

திரவநிதி இடர்

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் வங்கியைப் பயன்படுத்துவதினூடாக நிதியிடலின் தொடர்ச்சிக்கும் நெகிழ்வுத்தன்மைக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணுதல். ஒப்பந்தப்படியான கழிவு வழங்கப்படாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் தொகுதியின் நிதிப்பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டைக் கீழேயுள்ள அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

2018 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு:	**(ரூபா)**	**முதிர்ச்சி**
வட்டியுடனான கடன்களும் கடன்படல்களும்	2,639,032,817	OD - கோரிக்கையின்பேரில் செலுத்துவது
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	10,396,979,347	வழமையாக 03 மாதங்கள்

2017 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு:	**(ரூபா)**	**முதிர்ச்சி**
வட்டியுடனான கடன்களும் கடன்படல்களும்	1,361,443,839	OD - கோரிக்கையின்பேரில் செலுத்துவது
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	3,996,134,208	வழமையாக 03 மாதங்கள்

	2018	2017
	ரூபா	**ரூபா**
வட்டியுடனான கடன்களும் கடன்படல்களும்	2,639,032,817	1,361,443,839
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	10,396,979,347	3,996,134,208
கழிக்க: காசு மற்றும் குறுகிய கால வைப்புகள்	(1,021,184,699)	(312,050,520)
தேறிய கடன்	12,014,827,465	5,045,527,527
உரிமையாண்மை		
மூலதனமும் தேறிய கடனும்	21,715,464,949	11,963,537,834

குறிப்பு - 32

தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள்

30.1 அரசுடனும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களுடனும் கொடுக்கல்வாங்கல்கள்;

கூட்டுத்தாபனம் அதன் வழமையான தொழிற்பாடுகளின்போது தொடர்புடைய தரப்புக்களுடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்புகள் இலங்கை அரசாங்கம் (அரசு: கூட்டுத்தாபனத்தின் இறுதி உரிமையாளராக), பல்வேறு அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அரசுடனும் அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களுடனும் கூட்டுத்தாபனம் செய்துள்ள தனிப்பட முக்கியமான மற்றும் தனிப்பட முக்கியமற்றபோதிலும் கூட்டாக முக்கியமான கொடுக்கல்வாங்கல்களினதும் ஏற்பாடுகளினதும் விவரம் பின்வருமாறு :

கொருக்கல்வாங்கலின் தன்மை	2018	2017
கொருக்கல்வாங்கல்கள்:	**ரூபா**	**ரூபா**
விற்பனைகள்	38,895,306,533	32,563,691,374
தீர்க்கப்படாதுள்ள மீதிகள்:		
மருத்துவ வழங்கல்கள் பிரிவிடமிருந்து வருமதி	16,998,983,680	9,267,922,705
படையினரிடமிருந்து வருமதி	212,104,145	349,782,737
அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து வருமதி	241,805,728	205,221,465
பிற அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வருமதி	30,414,261	26,758,075

30.2 முக்கிய முகாமைத்துவ ஆக்க அமைவு

கூட்டுத்தாபனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியில் சபைப் பணிப்பாளர்கள், இலங்கைச் சுகாதார அமைச்சர் மற்றும் இலங்கைச் சுகாதார அமைச்சுக்கான செயலாளர் ஆகியோர் அடங்குவர்.

	2018	2017
	ரூபா	ரூபா
குறுகியகால ஊழிய நலன்கள்	4,706,000	4,738,343

குறிப்பு -33

ஐந்தொகைத் தேதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகைத் தேதிக்குப் பிந்திய எல்லா முக்கிய நிகழ்வுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு, தேவையானவிடத்து நிதிக்கூற்றில் பொருத்தமான சீராக்கலும் வெளிப்படுத்துகைகளும் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு - 34

SLRFS 9 இன் ஆரம்பப் பிரயோகத்தின் தாக்கமும் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முடிவுகளில் மாற்றமும்

SLFRS 9 நிதிக் கருவிகளின் ஆரம்பப் பிரயோகத்தின் விளைவாக, நிதிக்கூற்றுகளின் வகைப்படுத்தல், அளவீடு மற்றும் சமர்ப்பித்தலில் மாற்றங்கள் ஏற்பட்டன. 2018 ஜனவரி 1இல் இருந்தவாறு தேய்மானம் ஊடாக அளவீடுகளில் மாற்றத் தொகை ரூபா 89,624,714 ஆகும். மேலும், முன்னைய காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முடிவுகளில் மாற்றத்தின் தொகை ரூபா 1,107,619,070 ஆகும். உரிமைப் பங்குக் கூற்றில் தேறிய தாக்கம் ரூபா 1,107,994,355 ஆகும்.

SLFRS இன் ஆரம்பப் பிரயோகத்திலிருந்து தாக்கம்

நிதிக் கருவிகளின் வகைப்படுத்தலும் அளவீடும்

2018 ஜனவரி 01இல் LKAS 39 மற்றும் SLFRS 9 ஆகியவற்றுக்கு இணங்க, நிதிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகை கீழே ஒப்பிடப்படுகின்றன:

	LKAS 39		SLFRS 9	
நிதிச் சொத்துகள்	**அளவீட்டு வகுதி**	**கொண்டு செல்லும் தொகை (ரூபா)**	**அளவீட்டு வகுதி**	**கொண்டு செல்லும் தொகை (ரூபா)**
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	தேய்மானக் கிரயம் (கடன்களும் வருமதிகளும்)	252,005,797	தேய்மானக் கிரயம்	252,005,797
பணியாளர் கடன்கள்	தேய்மானக் கிரயம் (கடன்களும் வருமதிகளும்)	78,238,674	தேய்மானக் கிரயம்	78,238,674
வணிக வருமதிகள்	தேய்மானக் கிரயம் (கடன்களும் வருமதிகளும்)	8,867,573,316	தேய்மானக் கிரயம்	8,777,948,602
குறுகிய கால திறைசேரி உண்டியல்	தேய்மானக் கிரயம் (முதிர்ச்சிக்காக வைத்திருப்பவை)	60,044,705	தேய்மானக் கிரயம்	60,044,705

நிதிப் பொறுப்புகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலைப் பெறுமதியின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டின் கீழ் வரும் எவ்வித நிதிப்பொறுப்பையும் கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.

LKAS 39 இலிருந்து SLFRS 9 இருந்து நிதியியல் நிலைமை மீதிகளின் கணக்கிணக்கம்

கூட்டுத்தாபனம் அதன் நிதியியல் சொத்துகளை முகாமைத்துவம் செய்வதற்கான வணிக மாதிரிகள் மற்றும் அவற்றின் காசுப் பாய்ச்சல் பண்புகள் ஆகியவற்றின் விபரமான பகுப்பாய்வு ஒன்றை மேற்கொண்டது.

2018 ஜனவரி 1இல் SLFRS 9 இற்கு மாறியதன் விளைவாக அவற்றின் புதிய அளவீட்டு வகுதிகளுக்கான LKAS 9 இற்கு இணங்க அவற்றின் முன்னைய அளவீட்டு வகுதியிலிருந்து நிதிச் சொத்துகளின் கொண்டு செல்லும் தொகையை பின்வரும் அட்டவணை கணக்கிணக்கம் செய்கின்றது.

	LKAS 39 கொண்டு செல்லும் தொகை 2017 டிசம்பர் 31 (ரூபா)	மீள் வகைப்படுத்தல் (ரூபா))	மீள் அளவீடு (ரூபா)	SLFRS 9 கொண்டு செல்லும் தொகை 2018 ஜனவரி 1 (ரூபா)
தேய்மானக் கிரயம்				
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	252,005,797	-	-	252,005,797
பணியாளர் கடன்கள்	78,238,674	-	-	78,238,674
வணிக வருமதிகள்	8,867,573,316	-	(89,624,714)	8,777,948,602
குறுகிய கால திறைசேரி உண்டியல்கள்	60,044,705	-	-	60,044,705
	9,257,862,492	**-**	**(89,624,714)**	**9,168,237,778**

LKAS 9 இல் இருந்து SLFRS 9 இற்கான சேத இழப்பு ஏற்பாட்டு மீதியின் கணக்கிணக்கம்

2018 ஜனவரி 1இல் LKAS 39 இற்கு இணங்க அளவிடப்பட்ட முன்னைய காலப்பகுதிக்கான கடைசியான சேத இழப்பு ஏற்பாட்டிலிருந்து ஏற்பட்ட செலவு மாதிரியை SLFRS 9 எதிர்பார்த்த இழப்பு நட்ட மாதிரிக்கு இணங்க புதிய சேத இழப்பு ஏற்பாட்டை பின்வரும் அட்டவணை கணக்கிணக்கம் செய்கின்றது.

அளவீட்டு வகுதி	LKAS 39 இற்கு இணங்க ஏற்பாடு (ரூபா)	மீள் வகைப்படுத்தல்	மீள் அளவீடு	SLFRS 9 இற்கு இணங்க ஏற்பாடு (ரூபா)
வணிக வருமதிகள்	1,367,391,928	-	89,624,714.	1,457,016,642
	1,367,391,928		**89,624,714**	**1,457,022,279**

கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் எதிர்பார்ப்புகளின் மாற்றங்களிலிருந்து தாக்கம்

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் எதிர்பார்ப்புகளில் மாற்றங்களின் தாக்கம் பற்றிய மேல்நோக்கு ஒன்றை இந்தக் குறிப்பு வழங்குகின்றது.

மருத்துவ வழங்கல் பிரிவின் (MSD) 5 வருடங்களுக்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளை முழுமையாக வழங்குவது கூட்டுத்தாபனத்தின் வழக்கமாகும். எனினும், அண்மைக்கால அங்கீகாரம் தொடர்பான தகவலுக்கு இணங்க, மேலே சொல்லப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கான மதிப்பீடு மாற்றப்பட்டுள்ளது. ஆகவே, கடனாளியின் சேத இழப்பைக் கணிப்பதற்கு உண்மையான நட்டம் வழங்கப்பட்ட தவறுகை (LGD) வீதத்தை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்தது. எனவே, நிதிக் கூற்றில் அத்தகைய தீர்மானத்திலிருந்து தாக்கத்தின் தொகை ரூபா 1,107,619,070 ஆகும்.

HSM/A/SPC/1/18/30 2019 மே 29

தலைவர்,
இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் பற்றிய 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. **நிதிக் கூற்றுகள்**

1.1 அபிப்பிராயம்

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1)இன் பிரகாரம், 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றம் பற்றிய கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் தகைமை பெறும் அபிப்பிராயத்தின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் நீங்கலாக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள் 2018 டிசம்பர் 31ஆம் திகதி உள்ளவாறு நிதிக் கூற்றினதும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல்களின் உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வழங்குகின்றது.

1.2 தகைமைபெறும் அபிப்பிராயத்துக்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் கணக்கீட்டு நியமங்களின் நியதிகள் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் இசைவாக இல்லை.

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 (SLFRS)

நியமத்தின் பந்தி 9இன் பிரகாரம், மீண்டுவரும் அல்லது மீண்டுவராத அடிப்படையில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நடுநிலைப் பெறுமதியில் அளவிடுவதற்கான கணகீட்டுக் கொள்கையை கூட்டுத்தாபனம் கூறவில்லை.

(ஆ)இலங்கை கணக்கீட்டு நியமம் 1

நியமத்தின் பந்தி 32இன் பிரகாரம், இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுதிக்கப்பட்டால் அன்றி, ஒரு நிறுவனம் சொத்துகளையும் பொறுப்புகளையும் அல்லது வருமானங்களையும் செலவினங்களையும் ஒதுக்கிவைத்தலாகாது. இருப்பினும், 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு, வணிகக் கடனாளி கணக்கில் காணப்பட்ட ரூபா 2,590,505 கடன் நிலுவை அப்போதைய ரூபா 878,860,394 கடன் மீதிக்கு எதிராகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இடைப்போக்கில் இருந்த சரக்குக் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,703,133 கடன் மீதி அப்போது காணப்பட்ட ரூபா 253?016,979 கடன் மீதிக்கு எதிராகவும் செலுத்த வேண்டிய முகவர் தரகுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 6,610,270 கடன் மீதி அப்போது காணப்பட்ட ரூபா 60,011,028 கடன் மீதிக்கு எதிராகவும் ஒதுக்கப்பட்டு நிதிக்கூற்றுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. வணிகக் கடனாளி கணக்கு, இடைப்போக்கிலுள்ள இருப்புகள் கணக்கு மற்றும் செலுத்தவேண்டிய முகவர் தரகு ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 8**

நியமத்தின் 30 மற்றும் 31ஆம் பந்திகளின் பிரகாரம், வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமத்தை (SLFRS) இது வரை செயற்படுத்தாத ஒரு நிறுவனம் அது பயனுறுதியாக இல்லாதபோதிலும்கூட, இந்த விடயத்தை வெளிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் ஆரம்பப் பிரயோகக் காலப்பகுதியில் நிறுவனத்தின் நிதிக் கூற்றில் புதிய SLFRS இன் பிரயோகம் ஏற்படுத்தும் வாய்ப்பான தாக்கத்தின் மதிப்பீட்டுக்கான சம்பந்தப்பட்ட தெரிந்த அல்லது நியாயமாக மதிப்பிடக்கூடிய தகவலை அறிக்கைத் திகதியில் வழங்கப்பட்ட ஆனால் இற்றைவரை பயனுறுதியற்ற

புதிய அல்லது திருத்திய நியமங்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைளை கூட்டுத்தாபனம் வெளியிடவில்லை. (உதாரணம்: SLFRS 16 – குத்தகை)

(ஈ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 10**

நியமம் 10இன் பந்தி 17இன் பிரகாரம், நிதிக் கூற்றுகளை வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படும் திகதியும் வழங்கிய பின்னர் நிதிக் கூற்றைத் திருத்துவதற்கான தத்துவமும் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

நியமத்தின் பந்தி 81(எ)யின் பிரகாரம், தற்காலிக வேறுபாட்டின் ஒவ்வொரு வகை தொடர்பாகவும் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு காலப்பகுதிக்குமான ஒவ்வொரு வகையான பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்றில் வரிப் பொறுப்புகளின் விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் பந்திகள் 51 மற்றும் 55 ஆகியவற்றின் பிரகாரம், ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதியும் பயன்மிக்க ஆயுட்காலமும் மீளாய்வுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடின், LKAS 8 இற்கு இணங்க மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாக கணக்கில் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் சொத்து பயன்பாட்டுக்கு தயாராக இருக்கின்றபோது சொத்தின் தேய்மானம் ஆரம்பித்தல் வேண்டும். இருப்பினும், கூட்டுத்தாபனத்தனால் தேய்மானத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை பூரணத்துவமற்றதும் சம்பந்தப்பட்ட நியமத்தின் ஏற்பாட்டுக்கு இசைவாக இல்லாமலும் காணப்பட்டதுடன் தேய்மானம் ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ) 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு பற்றுக் குறிப்பு வழங்கப்பட்ட மருத்துவ வழங்கல் பிரிவுக்கான மருந்துகளின் வழங்கலின் கிரயம் ரூபா 4,080,000 செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டு வழிப்போக்கிலுள்ள இருப்புகள் கணக்கிற்கு வரவு வைக்கப்படாத காரணத்தினால் வழிப்போக்கில் உள்ள இருப்புக் கணக்கு மற்றும் வங்கிப் பட்டியல் கணக்கு ஆகியவை சமனான தொகையினால் மிகையாகக் கூறப்பட்டிருந்தன.

ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக திறைசேரி உண்டியல் வட்டி ரூபா 222,180 கழித்து கணக்கில் இடப்பட்டுள்ளது.

இ) மீளாய்வாண்டில் மீள் முதலீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா. 300,377 கழித்து கணக்கில் இடப்பட்டுள்ளது.

ஈ) பொதியிடும் பொருட்களின் இருப்பு 299,642 ரூபாவினால் குறைத்து மதிப்பிடப்பட்டு 2018 டிசம்பர் 31இல் இருந்தவாறு கணக்கில் இடப்பட்டுள்ளது.

உ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைத்த கட்டிட வரி வருமானம் ரூபா 531,025 விற்பனை வருமானமாகக் கருதி கணக்கில் இடப்பட்டிருந்தது.

1.2.3 கணக்காய்வுக்குப் போதிய சான்றுகள் இன்மை

அ) 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு 247 கடனாளிகள் தொடர்பாக கடனாளி மீதி 82,983,839,668 ரூபாவில், 176 கடனாளிகள் தொடர்பான மொத்தம் 1,915,058,173 ரூபாவின் உறுதிப்படுத்தல் கணக்காய்வுக்குக் கிடைக்கச் செய்யப்படவில்லை.

ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39இன் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் கடனாளிகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு ஆகியவற்றின் 2017 டிசம்பர் 31ஆம் ஆண்டில் உள்ளவாறாக ஐயக்கடன் ஏற்பாடு முறையே ரூபா 55,538,918 மற்றும் ரூபா 2,419,472,081 ஆகியவற்றின் கணிப்பீட்டு அட்டவணை அல்லது அடிப்படை கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

1.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மொத்தக் கடனாளி நிலுவைகளில் 95.06 வீதம் அல்லது மொத்தம் ரூபா 16,998,983,680 மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குக்கு இணங்க, அந்த மீதி ரூபா 16,787,391,787 ஆகும். இணக்கக் கூற்றைத் தயாரித்து வேறுபாடு 211,591,893 ரூபாவுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.2.5 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

அ) மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து வருமதியான 16,998,983,680 ரூபாவில், 211,591,893 ரூபா 9 தொடக்கம் 20 வருடங்கள் வரை கடனாளி நிலுவையாக உள்ள தொகையாகும்.

ஆ) கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கைக்கு இணங்க, வியாபாரக் கடனாளிகளிடமிருந்து அறவிடவேண்டிய தொகை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்கும் 45 நாட்களுக்கும் இடையில் அறவிடப்படுதல் வேண்டும். எனினும், 2018 டிசம்பர் 31இல் இருந்தவாறு, கடன் மீதி 878,860,394 ரூபாவில், தனியார், அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களிடமிருந்து மொத்தம் 12,408,417 ரூபாய் 5 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் இலங்கைப் பாராளுமன்றத்திடமிருந்து அறவிடவேண்டிய 14,621,371 ரூபாய் ஒரு வருடத்துக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டது. கடனாளி மீதி 3,138,783 ரூபாவை அறவிடுவதற்கு மாத்திரமே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இ. 2-19 டிசம்பர் 31இல் உள்ளவாறு வருமதியான நட்டோத்தரவாதம் 2,279,937 ரூபாவாகக் காணப்பட்டதுடன் 2 தொடக்கம் 12 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அதிலிருந்து 525,006 ரூபாவை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

ஈ. வருமதியான கொள்கலன் வைப்பு மீதி 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூபா 11,848,455 ஆகும் என்பதுடன் அதிலிருந்து 6,219,806 ரூபாவை 2 தொடக்கம் 11 வருடங்கள் வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

உ. கணனி முறைமை ஒன்றைப் பொருத்துவதற்காக 2014ஆம் ஆண்டில் ரூபா 150,000 முற்பணமும் 2007 முதல் 2015 வரை மொத்த முற்பணம் 1,237,753 ரூபாவும் வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இரண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணம் 118,550 ரூபா 2019 மார்ச் 07ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

ஊ. 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பட்டியல்கள் மீதி 6,995,499 ரூபாவில், 1,195,759 ரூபா 4 வருடங்களுக்கும் மேலாகவும், 27,674,516 ரூபா 3 வருடங்களுக்கும் மேலாகவும், 76,784,033 ரூபா 2 வருடங்களுக்கும் மேலாகவும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் வழங்கல் மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்திற்கான 100 வீத நாணயக் கடிதப் பெறுமதி செலுத்தப்படாதிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமத்துக்கு இணங்க எனது கணக்காய்வை நான் நடத்தினேன். இந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுகளின் கணக்காய்வுப் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த கணக்காய்வுச் சான்று எனது அபிப்பிராயத்தின் ஓர் அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமாகும் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுகளுக்கான முகாமைத்தினதும் கட்டுப்படுத்தும் பொறுப்பைக்கொண்டுள்ளவர்களினதும் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வழங்கும் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பானதாகும். மோசடி அல்லது தவறு காரணமாக பிழையான கூற்றுகள் அற்ற நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதை இயலச் செய்வதற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடு அவசியமாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில், தொடரும் அக்கறையாக கூட்டுத்தாபனத்தின் ஆற்றலை மதிப்படுதல், தொடரும் அக்கறையாக பிரயோகிக்கத்தக்க விடயங்களை வெளியிடுதல், கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கான அல்லது தொழிற்பாட்டை நிறுத்துவதற்காக எண்ணம் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறு செய்வதை விட வேறு

யதார்த்தமான மாற்றுவழி இல்லாதவிடத்து தொடரும் அக்கறை அடிப்படையைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் பொறுப்புவாய்ந்ததாகும்.

ஆளுகை ஒப்படைக்கப்பட்டவர்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் நடவடிக்கையை மேற்பார்வைசெய்யும் பொறுப்புள்ளவர்களாவர்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1)இன் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு இயலச்செய்வதற்காக அதன் எல்லா வருமானங்கள், செலவினம், சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தகுந்த புத்தகங்கள், பதிவு ஆகியவற்றைப் பேணுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

1.4 நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்

எனது குறிக்கோள் மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுகள் முழுமையாக பொருண்மையான தவறான கூற்றுகள் இன்றி காணப்படுகின்றனவா என நியாயமான உறுதிப்படுத்தலைப் பெறுதல் ஆகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்ட உறுதிப்படுத்தலாகும். ஆனால், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்பட்ட கணக்காய்வு ஒரு தவறான கூற்று காணப்படும்போது அதனை எப்போதும் கண்டுபிடிக்கும் என்னும் உத்தரவாதம் அல்ல. தவறான கூற்றுகள் மோசடி அல்லது தவறு காரணமாக எழலாம் என்பதுடன் இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் தனியாக அல்லது மொத்தமாக நியமாயமான அளவில் செல்வாக்குச் செலுத்துவதாக எதிர்பார்க்கப்படின் அவை பொருண்மையானவையாகக் கருதப்படுகின்றன.

நான் கணக்காய்வு முழுவதிலும் தனிப்பட்ட தீர்மானத்தைப் பிரயோகிப்பதுடன் தொழில்வாண்மை சந்தேகத்தைப் பேணுகின்றேன். அத்துடன் நான்,

- மோசடி காரணமாக இருப்பினும் சரி, தவறு காரணமாக இருப்பினும் சரி, நிதிக் கூற்றுகளின் தவறான கூற்று பொருண்மைகளின் இடரை அடையாளம் காணுதலும் மதிப்பிடுதலும், அந்த இடர்களுக்கான கணக்காய்வு நடவடிக்கை பதில் நடவடிக்கைகளை வடிவமைத்து செயலாற்றல், எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்கும் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுதல். மோசடியானது கூட்டுச் சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே தவிர்த்தல், பிறழ்கூற்றுகள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்குவதால் மோசடியின் விளைவான பொருண்மை தவறான கூற்றொன்றை கண்டுபிடிக்காத இடர் தவறுதலின் விளைவான ஒன்றை விட அதிகமாகும்.

- கணக்காய்வு நடவடிக்கைமுறைகளை வடிவமைப்பதற்காக, ஆனால் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை பற்றிய அபிப்பிராயம் ஒன்றை வெளியிடும் நோக்கத்துக்காகவன்றி, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைமுறையை வடிவமைப்பதற்காக கணக்காய்வு தொடர்பான உள்ளகக் கணக்காய்வின் புரிந்துணர்வு ஒன்றைப் பெறுதல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் ஏற்புடைமை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சம்பந்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் காரணத்தன்மை மற்றும் தொடர்பான வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை மதிப்பிடுதல்.

- கணக்கீட்டின் தொடர்ந்து இயங்கும் அமைப்பின் முகாமைத்துவத்தின் பயன்பாட்டின் ஏற்புடைமை மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் அமைப்பாகத் தொடர்வதற்கு கூட்டுத்தாபனத்தின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் தொடர்பாக ஒரு பொருண்மை நிச்சயத்தன்மை காணப்படுகின்றதா என முடிவுறுத்தல். பொருண்மை நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவுறுத்தினால், எனது கணக்காய்வாளர் அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு கவனத்தை ஈர்க்குமாறு அல்லது, அத்தகைய வெளிப்படுத்தல் போதியதாக இல்லாவிடின், எனது அபிப்பிராயத்தை மேம்படுத்துமாறு நான் வேண்டப்படுகின்றேன். எனது கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வு சான்றின் அடிப்படையில் எனது முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் அமைப்பாக தொடர்ந்தும் இயங்குவதை நிறுத்துவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளிட்ட நிதிக்கூற்றுனி ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தையும் நியாயமாக சமர்ப்பித்தலை அடையும் விதத்தில் நிதிக் கூற்றுகள் அடிநிலையான கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா எனவும் மதிப்பிடல்.

கணக்காய்வின்போது நான் அடையாளம் கண்ட உள்ளகக் கட்டுப்பாட்டின் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளை உள்ளிட்ட குறிப்பிடப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பாடலை மேற்கொண்டேன்.

2 ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (அ) வின் பிரகாரம், இந்த அறிக்கையின் 'கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படை' பற்றிய பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் நீங்கலாக, கணக்காய்வுக்குத் தேவையான எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டதுடன் எனது பரிசோதனையில் தோற்றுகின்றவாறு, கூட்டுத்தாபனம் தகுந்த நிதி அறிக்கையைப் பேணியுள்ளது.

- 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iii) இல் குறித்துக் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டுக்கு இசைவானதாகும்.

- இந்த அறிக்கையின் பந்தி 1.2.4 இன் அவதானிப்பு நீங்கலாக, 2008ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) யின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றிய நடவடிக்கைமுறைகள், பெறப்பட்ட சான்று மற்றும் பொருண்மை விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டு பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக, பின்வரும் கூற்றுகளை மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தும் எதுவும் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை.

- 2008ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) யின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் ஆளுகைச் சபையின் எவரேனும் உறுப்பினர் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் சாதாரண வணிக நிலைமைக்குப் புறம்பாக நேரடியாக அல்லது அவ்வாறின்றி, ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாரா என்பது.

- 2008ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) யின் தேவைப்பாடுகளின் பிரகாரம், ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்திலான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது கூட்டுத்தாபனத்தின் ஆளுகைச் சபையினால் வழங்கப்பட்ட விசேட பணிப்புகளுக்கு கூட்டுத்தாபனம் இணங்கி ஒழுகவில்லையா என்பது.

சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் போன்றவை தொடர்பாக	விபரம்
(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதியியல் ஒழுங்குவிதிகள் (i) நிதியியல் ஒழுங்கு விதிகள் 103, 104 மற்றும் 105	(i) கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் காலாஹரீ வதியான மருத்துவ வழங்கல்களின் மொத்தக் கிரயம் ரூபா 123,610,942 ஆகும். நிதியியல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் விசாரணை ஒன்றை நடத்துவதற்கும் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்ப- தற்கும் பிரயோகிக்கத்தக்கவாறு நட்டங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்- டிருக்கவில்லை. (ii) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் 09 வாகனங்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த விபத்துகள் தொடர்பாக நிதியியல் ஒழுங்கு- விதிகளின் பிரகாரம் பூர்வாங்க விசாரணை மற்றும் முழுமையான விசாரணையை நடத்துவதற்கும் அந்த விசாரணைகளின் அறிக்கையை சம்பத்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii)	நிதியியல் ஒழுங்குவிதிகள் 571(2)	தவறிய வைப்புகள் மொத்தம் 8,512,448/= ரூபாவை அரசாங்கக் வருமானத்தில் வரவில் இடுவதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்- பட்டிருக்கவில்லை.
(iii)	நிதியியல் ஒழுங்குவிதிகள் 757(2)(அ)	2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு நடத்தப்படவேண்டிய அளவீட்டுச் சபை அறிக்கைகள் 2019 மே 10ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(iv)	நிதியியல் ஒழுங்குவிதிகள் 770(2)	2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு அளவீட்டுச் சபையின் அறிக்கைகளுக்கு இணங்க ரூபா 1,718,850/- பெறுமதியான 54 பொருட்பதிவேட்டுப் பொருட்கள் சேதமடைந்திருந்தபோதிலும், நிதியியல் ஒழுங்கு- விதிகளின் பிரகாரம் சேவைக்குப் பயன்படுத்த முடியாத பொருட்களை அடையாளம் கண்டு விற்பதற்கு அல்லது அழிப்பதற்கு அளவீட்டுச் சபை ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(v)	2015 ஜூலை 10ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை	செயற்படுத்த முடியாத நிலையில் இருக்கும் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 04 வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கையுதிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2008ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) வின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியுள்ளதா என்பது.

  கௌரவ சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் உலக சுகாதார தாபனத்தின் 143ஆவது நிறைவேற்றுப் பேரவையின் உப தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டதையிட்டு வாழ்த்துவதற்காக நடத்தப்பட்ட வைபவத்துக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ரூபா 1,000,000 அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

- 2008ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) வின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த காலப்பகுதியிலும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு இசைவாகவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்பட்டனவா என்பது.

  (அ) **கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகல்**

  (i) கொள்வனவு வழிகாட்டல்களின் வழிகாட்டி 4.2இற்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களுக்கான ஒரு முதன்மை கொள்வனவுத் திட்டமும் கொள்வனவு கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

  (ii) மீளாய்வாண்டில், கொள்வனவு முறையைப் (shopping method) பயன்படுத்தி 1,530,229 ரூபா பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவு வழிகாட்டி கையேட்டின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு (TEC) முன்கூட்டியே தெரிவிக்காமை, எல்லா விலைகூறல் ஆவணங்களும் TEC உறுப்பினர்களால் பரிசீலித்து அங்கீகரிக்கப்படாமை, முறைசார் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக போதியளவு நேரம் கிடைக்கக்கூடியவாறு விலைகூறல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமை மற்றும் கொள்வனவுத் திட்டத்தைப் பின்பற்றாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. வழங்கல் தாமதித்த ஒரு கட்டளை தொடர்பாக தாமதக் கட்டணத்துக்கான நிபந்தனைகளைக் குறித்துரைக்காத காரணத்தினால், தாமதித்த 124 நாட்கள் காலப்பகுதிக்கான தாமதக் கட்டணத்தை அறவிடுதல் சாத்தியப்படவில்லை.

  (iii) மீளாய்வாண்டில், ரூபா 57,675,670 செலவில் எழுநூற்று இருபது (720) 10 மி.லீ. குப்பி 100 மி.கி. மற்றும் தொள்ளாயிரத்து இருபது (920) 50 மி.லீ. குப்பி 500 மி.கி. Ritumixmab ஊசி மருந்து

மட்டுப்படுத்தப்பட்ட போட்டி முறைமையின் கீழ் சர்வதேச சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விலைகூறுனர் முன்னைய வழங்குனர் அல்ல என்னும் காரணத்தினால் விலைகூறலை நிராகரிப்பதற்கான அதிகாரம் TEC இற்கு இல்லாத போதிலும், அதிகுறைந்த விலைகூறுனர் இந்த அடிப்படையில் நிராகரிக்கப்பட்டார்.

மொத்தக் கட்டளை ஒவ்வொன்றிலும் 50 சத வீதத்தை இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆகக் குறைந்த விலைகூறுனருக்கு வழங்குவதற்கான TEC இன் விதப்புரைக்கு கொள்வனவுக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தபோதிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆகக் குறைந்த விலைகூறுனர்கள் கூட முன்னைய வழங்குனர்கள் அல்ல. ஆகக்குறைந்த விலைகூறுனருக்கு ஒப்பந்தம் வழங்கப்படாத காரணத்தினால், கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மேலதிக செலவு ரூபா 5,421,827 ஆகும்.

(iv) உள்நாட்டுச் சந்தையில் இருந்து ஐந்நூற்று நாற்பது (540) 100 மி.கி. 10 மி.லீ. மற்றும் அறுநூற்றுத் தொண்ணூறு 500 மி.கி. 50 மி.லீ. Rituximab ஊசிமருந்து குப்பிகள் ரூபா 67,768,600 செலவில் கொள்வனவு செய்யப்பட்டதால் இறக்குமதி விலையை விட மேலதிகமாகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 21,606,922 ஆகும். சம்பந்தப்பட்ட வழங்குனரிடமிருந்து செயலாற்றப் பாதுகாப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

TEC இற்கு இரண்டு விசேட வைத்தியர்கள் நியமிக்கப்படவேண்டுமாயினும் ஒரு விசேட வைத்தியர் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தார். விலை கூறுனர் முன்னைய வழங்குனர் அல்ல என்னும் அடிப்படையில் விலைகூறலை நிராகரிப்பதற்கான அதிகாரம் TEC இற்கு இல்லாதபோதிலும், இந்த அடிப்படையில் ஆகக் குறைந்த விலைகூறலும் இரண்டாவது ஆகக் குறைந்த விலைகூறலும் நிராகரிக்கப்பட்டிருந்தன. நான்காவது ஆகக் குறைந்த விலைகூறுனருக்கு ஒப்பந்தம் வழங்கியதன் விளைவாக, கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மேலதிக செலவு ரூபா. 44,545,500 ஆகும்.

(v) மீளாய்வாண்டில், blood lancet உடன் குருதி குளுக்கோஸ் சோதனைப் பட்டி 1,102,600 அலகுகளும் குருதி குளுக்கோஸ் சோதனைக் கருவிகள் 974 அலகுகளும் வரையறுக்கப்பட்ட சர்வதேச போட்டித்தன்மையான விலைகூறலின் கீழ் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தன.

கொள்வனவுத் திட்ட கால அட்டவணைக்குப் புறம்பாக மேலதிகமாக தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் கொள்வனவுக்குச் செயற்பாடுகளுக்கு முறையே 14 வாரங்களும் 12 வாரங்களும் செலவிடப்பட்டு ஆறு மாத கால தாமதத்தின் பின்னர் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தாமதம் காரணமாக, பிரதான கட்டளை கொள்வனவு செய்யப்பட்ட அதே வழங்குனரிடமிருந்து நேரடி ஒப்பந்த முறையின் கீழ் ரூபா 47,259,233 செலவில் 2,878,150 அலகுகள் blood lancet உடன் குருதி குளுக்கோஸ் சோதனைப் பட்டிகள் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தன.

சொல்லப்பட்ட இரண்டாவது கொள்வனவு தொடர்பாக கொள்வனவுக் குழுவின் விதப்புரை 2018 ஜூலை 17ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தபோதிலும், கொள்வனவுக் கட்டளை ஒரு நாள் முன்கூட்டியே, 2018 ஜூலை 16ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது.

இரண்டாவது கட்டளையை 1,439,075 அலகுகளினால் அதிகரிப்பதற்கு திணைக்கள கொள்வனவுக் குழு 2018 ஆகஸ்ட் 08ஆம் திகதி விதப்புரை வழங்கியிருந்தபோதிலும், கொள்வனவுக் கட்டளை அதற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 07ஆம் திகதி பொருட்கள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பிரதான கட்டளை ஊடாக blood lancet உடன் குருதி குளுக்கோஸ் சோதனைப் பட்டி அலகொன்று ரூபா. 9.89இற்கு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், இரண்டாவது கட்டளை ஊடாக அலகொன்றுக்கு ரூபா 16.42 வீதம் 4,317,225 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 28,191,479 ஆகும்.

வழங்குனரிடமிருந்து செயலாற்ற பாதுகாப்பு பெறப்பட்டிருக்கவோ அல்லது உடன்டிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவோ இல்லை.

(vi) 240,000 அலகுகள் அறுவைச் சிகிச்சைக்கான 'Sterile Single Use Plastic Syringes Size 50 ml' ரூபா 10,045,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வழங்குனரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு விதித்துரைக்கப்பட்ட சுட்டுத்துண்டு (label) இடப்படாத காரணத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவு 240,000 அலகுகளை நிராகரித்த காரணத்தினால் நிறுத்தி வைத்தல் மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 1,597,563 மேலதிக செலவு ஏற்பட்டது. இந்தத் தொகையில், ரூபா 712,759 வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டதுடன் கூட்டுத்தாபன ஊழியர்களின் பொறுப்புக்காக அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 884,804 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) மருத்துவ வழங்கல் பிரிவுக்கான கூட்டுத்தாபனத்தின் பிரதான வழங்கல்களில் தாமதம் காணப்பட்டபோதும் நோயாளரின் பெயரில் மருந்துகளுக்காக கட்டளை வழங்கப்பட்டபோதும் மருந்துகள் உட்பட மருத்துவ வழங்கல்கள் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டபோதிலும், கொள்வனவு நடவடிக்கைமுறைகள் மற்றும் ஒழுங்குகளைப் நிர்ணயித்து எழுத்திலான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட மருத்துவ வழங்கல்களுக்காக அந்தப் பிரிவிலிருந்து பணம் கிடைத்த பின்னர்தான் வழங்குனருக்குக் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும் என பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நிபந்தனை விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல்களின் வழிகாட்டி 2.14.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை மீறி கொள்வனவு வழங்கப்பட்டிருந்ததுடன் தலைவரால் நியமிக்கப்பட வேண்டிய TEC, முகாமைத்துவப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டிருந்தது.

விலைமனுக்களுடன் மாதிரிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், மதிப்பீட்டின்போது அந்தத் தேவைப்பாடு கவனத்தில் கொள்ளப்படாது காணப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் வழங்குனருடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ)ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

(i) ஒப்பந்தத் தொகை 106,305,300 ரூபாவுக்கான புதிய கட்டிட நிர்மாணத்துக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரருக்கு 2013ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருந்த 88,926,577 ரூபாவில் எவ்வித அங்கீகாரமும் இன்றி மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 6,824,841 ஆகும்.

ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க, 2019 மே 19ஆம் திகதியளவில் கூட நிர்மாண வேலையைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளதுடன் அன்றைய தினத்தில் 04 வருடங்களையும் விஞ்சிய தாமதக் காலப்பகுதிக்கான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2016 பெப்ரவரி 24ஆம் திகதி செயலாற்றப் பிணைமுறி முடிவடைந்துள்ளபோதிலும், 2019 மார்ச் 18ஆம் திகதிவரையில் கூட செல்லுபடியாகும் காலப்பகுதியை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தேவைப்பாட்டு விதிப்புரைகளுக்கு இசைவாக இல்லாததும் தரப் பரிசோதனையில் தவறியுள்ளதுமான ரூபா 4,010,742 ஒப்பந்தப் பெறுமதியான ஒரு மின் தூக்கி பொருத்தப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் 24 வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கு ரூபா 5,732,000 செலுத்தப்பட்டிருந்தபோதிலும், உத்தரவாத காலப்பகுதி முடிவடையும் வரையிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஏழு மின்சார வினியோகப் பலகைகள் (electricity distribution panels) பொருத்தும் செயற்பாடுகள் 2019 மார்ச் 18ஆம் திகதி வரையில் பொருத்தப்படாத போதிலும், அந்நோக்கத்துக்காக 2016இல் ரூபா 284,900 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 49,335,000 ஒப்பந்தப் பெறுமதியான தொழில்முயற்சி அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு 2016 டிசம்பர் 19ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க, அந்தத் திகதியிலிருந்து 61 வாரங்களுக்குள் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவேண்டுமெனினும், 2019 மார்ச் 25ஆம் திகதி வரையில் கூட அது பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் தாமதக் காலம் 55 வாரங்கள் ஆகும். ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு முறி ஒன்றைப் பெறாமலே 2018 மார்ச் 12ஆம் திகதி ரூபா 4,935,500 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) முகாமைத்துவச் செயற்பாடுகள்

(i) கூட்டுத்தாபனத்தைத் தாபித்தல் தொடர்பான 1971 செப்டம்பர் 22ஆம் திகதிய 14976/8 ஆம் இலக்க இலங்கை அரசின் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த நுட்பமான இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலைத் தாபித்தல் மற்றும் அவற்றுக்கு அனுசரணை அளித்தல் மற்றும் மருந்துப் பொருட்களை சந்தைப்படுத்தல் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையில் 2016 – 2018 வருட காலப்பகுதிக்கான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனத்தினால் 2016-2018 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைத் திட்டத்தில் செயற்பாடுகளின் செயலாற்றப் பிரமாணங்கள் கணிய மற்றும் அளவீட்டு மட்டத்தில் குறிப்பாக சொல்லப்படாத காரணத்தினால், 2018ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 செயற்பாடுகளின் முன்னேற்றத்தை குறிப்பாக மதிப்பிட முடியவில்லை.

(iii) 2016-2018 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நிறைவேற்ற முடியாமல்போன 06 செயற்பாடுகள் 2018ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2015ஆம் ஆண்டு முதல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வணிக வளங்கள் திட்டமிடல் முறைமையை புற முறைமைகளுடன் இணைத்தல், வணிக தொடர்ச்சித் திட்டத்தை மேம்படுத்தல், ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துதல், முகாமைத்துவப் பதவிகளுக்கு அடுத்துவருவோர் பற்றிய திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் தரப்படுத்தப்பட்ட பதவி உயர்வுகளை வழங்குதல் ஆகியவற்றை கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்ற முடியவில்லை.

(ஆ)தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

(i) கூட்டுத்தாபனத்தினால் விற்பனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களில் தரம் குன்றியவை மற்றும் காலாவதியான மருந்துப் பொருட்கள் முன்னைய வருடத்தில் முறையே 23,561,218 ரூபா மற்றும் 80,834,686 ரூபாவும் மீளாய்வாண்டில் 13,979,105 ரூபா மற்றும் 42,776,256 ரூபாவாகும்.

(ii) 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு, மருத்துவ வழங்கல் பிரிவுக்கு தரம் குன்றிய மற்றும் சேதமடைந்த வழங்கல் மற்றும் குறைவான வழங்கல்கள் நிர்வாகக் கட்டணங்கள், அந்த இருப்புகளை அழிப்பதற்கான செலவினம் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட பற்றுக் குறிப்பின் பெறுமதி ரூபா 1,754,661,431 ஆகக் காணப்பட்டபோதிலும், அதிலிருந்து 811,195,059 ரூபாவை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 47,106,121 கரும்பட்டியலில் இடப்பட்டவர்களிடமிருந்தும் ரூபா 283,811,421 தவணை தவறியவர்களிடமிருந்தும் அறவிடவேண்டியிருந்ததால் அந்தத் தொகையை அறவிடுதல் நிச்சயமற்றது.

(iii) தொழிற்படும் 40 ஒசுசல நிறுவனங்களில் மீளாய்வாண்டில் 24 நிறுவனங்கள் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் மொத்த நட்டம் ரூபா 45,139,259 ஆகும். அந்த நட்டத்தில் 32 வீதம் அவிசாவளை, மினுவாங்கொடை, தியத்தலாவை, தங்கல்லை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மற்றும் இரத்தினபுரிய ஆகிய இடங்களில் அமைந்துள்ள 7 ஒசுசல நிறுவனங்களால் ஏற்பட்டதுடன் அவை 2013ஆம் ஆண்டில் இருந்து நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2018ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் 2018 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பதில் கூற்று

2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமம் (SLFRS) 13

SLFRS 13 இன் பிரகாரம், நிறுவனத்துக்குச் சொந்தமான விற்பனைக்காக பேணப்படும் நடைமுறையற்ற சொத்துகள் எதுவும் இல்லை. விபரமான வெளியிடுதல்கள், அதாவது, ஆரம்ப ஏற்பிசைவு, மதிப்பீட்டு முறைமை மற்றும் மீண்டுவரும் அடிப்படையில் நிதிச் சொத்துகள் தொடர்பான நடவடிக்கைகள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1

இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32ஆம் பந்திக்கு இணங்க, சொத்துகளும் பொறுப்புகளும் ஈடுசெய்யப்படலாகாது. ஆனால், இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது ஒரே கணக்கின் பற்று மற்றும் வரவு மீதிகளாகும்.

உதாரணம்: கடன்பட்டவர்களின் மீதிகளில் முற்பணங்கள், பற்றுக் குறிப்புகள் மற்றும் கடன்பட்டவர்களிடமிருந்து வருமதியான மிகைக் கொடுப்பனவுகள் ஆகியன காணப்படுவதுடன் ஆண்டின் இறுதியில் அதே கணக்கில் உள்ள மீதிகளை வெவ்வேறாகக் குறிப்பிடுதல் நடைமுறையில் சிரமம் ஆகும். இடைப்போக்கில் உள்ள இருப்புகள் மற்றும் முகவர் தரவுக்கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒத்த மீதிகளாகும்.

கொடுக்கல் வாங்கல்களின் சாரமாகவும் நிதிப் பாய்ச்சலை சரியாகக் குறித்துக் காட்டுவதன் அடிப்படையிலும் இவை அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 8

வழங்கப்பட்ட, ஆனால் பயனுறுதியற்ற கணக்கீட்டு நியமத்தை செயற்படுத்துகையில், அதன் தாக்கம் மதிப்பிடக்கூடியதாக இருப்பதுடன் மதிப்பிடப்படுதலும் வேண்டுமெனில் அத்தகைய நியமத்தை வெளிக்காட்டுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

சொத்துகள் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்படாத காரணத்தினால், SLFRS 16 நேரடியாக ஏற்புடையதல்ல. எனினும், இரத்மலானை களஞ்சியம் அமைந்துள்ள குத்தகைக்குப் பெறப்பட்ட காணி பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் 2013ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டவாறு 'SOAT – குத்தகைக் காணி மீது வழக்குத் தொடுப்பதற்கான உரிமை' யின் பிரகாரம் குத்தகையாக ஏற்பிசைவு செய்யப்பட்டு அதற்கிணங்க அது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

நிதிக் கூற்றுகளை வழங்குவதற்கும் திருத்துவதற்குமான அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரம் நிதிக் கூற்றின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் திருத்துவதற்கான அதிகாரம் ஆகியவை ஆண்டறிக்கையுடன் வெளியிடப்படும்.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12

இப்போதுள்ளவாறு, தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் சுருக்கத்தை நாம் சமர்ப்பித்துள்ளோம். எதிர்காலத்தில் பின்வருமாறு விபரமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு	**தற்காலிக வேறுபாடுகள் (ரூபா)**
கட்டிடங்கள்	220,391,466
வாகனங்கள்	65,926,658
தளபாடங்களும் பொருத்தனைகளும்	29,535,841
உபகரணங்கள்	51,692,284
இயந்திரங்களும் பொறிகளும்	17,288,618
கணனிகள்	15,344,706
	400,179,573
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்	
ஓய்வு மிகையூதியப் பொறுப்பு	221,192,102
	221,192,102
பயனுறுதியான வரி வீதம் 28%	
பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு	(112,050,280)
பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள்	61,933,789
2018 டிசம்பர் 31இல் இருந்தவாறு மீதி	**(50,116,492)**
2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு மீதி	(32,134,929)
ஆண்டுக்கான கட்டணங்கள்	**17,981,562**

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

ஆண்டின் இறுதியில் அளவீட்டுச் சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது, சொத்துகளின் ஆயுட்காலக் கணிப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அவசியமானவிடத்து சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. கணக்கீட்டுக் கொள்கை 4.1.3இன் கீழ் சொத்துகளின் தேய்மானத்துக்கான அடிப்படை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சொல்லப்பட்ட சொத்தின் நுகர்வு ஆரம்பிக்கும்போது சொத்துகளின் தேய்மானம் ஆரம்பிக்கின்றது. அத்தகைய விதத்தில் தேய்மானம் இல்லாத சொத்துகளும் உள்ளன. ஆதலால், கணக்கீட்டுக் கொள்கை பூரணமற்றது என்பதையும் கணக்கீட்டு நியமம் 16இற்கு இசைவாக இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38

கூட்டுத்தாபனத்தினால் அருவச் சொத்தாகக் காட்டப்பட்டிருப்பது ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள MY POS என அழைக்கப்படும் மென்பொருள் ஆகும். அதன் ஆயுட்கால மாற்றம் எதிர்பார்க்கப்படாததால், சம்பந்தப்பட்ட மதிப்பீடு மாற்றப்பட்டு தேய்மானம் 2018ஆம் ஆண்டில் முடிவடைந்தது.

2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கட்டளைப்பட்டியல் பெறுமதியின் அடிப்படையில் சென்மதிப் பட்டியல்கள் கணக்கிலிருந்து இடைப்போக்கிலுள்ள பொருட்கள் கணக்கிற்கு நாம் மாற்றங்களை மேற்கொள்கின்றோம். LP/DHS/RSS/RQ/151/1075RD/16 இலக்க கட்டளைப்பட்டியல் தொடர்பாக (விலைப்பட்டியல் இல. 74590 மற்றும் விலைப்பட்டியல் இல. 74806) ஆகிய இரண்டு விலைப்பட்டியல்கள் உள்ளன.

முழுமையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டபோதிலும், 2 விலைப்பட்டியல்களில் ஒன்று கிடைக்கப்பெறாத காரணத்தினால், அதனை இடைப்போக்கிலுள்ள பொருட்கள் கணக்கில் இருந்து சென்மதி விலைப்பட்டியல் கணக்கிற்கு மாற்ற முடியவில்லை. பல்வேறு காரணங்களால், வருமதியான பற்றுக்குறிப்பு / விலைப்பட்டியல் பெறுமதி செலுத்திய பெறுமதியிலிருந்து வேறுபடலாம் என்பதால் அது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, மாற்றத்தை மேற்கொள்வதற்கு முன்னர் பெறுமதியை உறுதிப்படுத்தவேண்டியுள்ளது.

(ஆ) & (இ) இதனை 2019ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஈ) இது 2019 ஜனவரியில் JV 14 ஊடாகத் திருத்தப்பட்டுள்ளது.

(உ) குறிப்பிட்ட எல்லா செலவினங்களும் 2019ஆம் ஆண்டின் செலவினங்களாகக் கருதி கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதால், மீண்டும் அட்டுறு அடிப்படையில் கணக்கில் இடுவதற்கான தேவை எழாது.

(ஊ) இது VAT ஐ கணிக்கும்போது ஏற்பட்ட ஒரு தவறாகும். எதிர்காலத்தில் அத்தகைய தவறுகள் இடம்பெறாது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(எ) மருத்துவ வழங்கல் பிரிவு கடன்பட்டோருக்காக மேற்கொண்ட 2017 டிசம்பர் 31இல் உள்ளவாறான பின்னோக்கிய விளைவுள்ளதாக மீளக் கூறப்பட்ட ஐயக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்காக MOORE STEPHENS AIYAR கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் பிரதி இத்துடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அதற்கிணங்க, வருமான வரியைக் கணிப்பதில் சீராக்கம் செய்யப்பட்ட ரூபா 992,894,846 ஐயக்கடனுக்கான ஒதுக்கீடு சரியானதாகும். அறிக்கையில் குறிப்பிட்ப்பட்டவாறு வருமான வரிப் பொறுப்பில் ரூபா 1,476,169 குறைபாடு காணப்படாது.

திறைசேரி உண்டியல்களில் ரூபா 222,180 வேறுபாட்டை ஏற்றுக்கொள்கின்றோம்.

(ஏ) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இரத்தினபுரி ஒசுசல கட்டிடத்தின் ஒரு பகுதி பிற தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவத் தீர்மானத்தின் பிரகாரம், பல வருடங்களாக இந்த வருமானம் ஒசுசல நிறுவனத்தின் வருமானமாகக் கருதப்படுவதுடன் கட்டிடத்தின் மொத்தத் தேய்மானம் ஒசுசல நிறுவனத்தின் செலவினமாகக் கருதப்படுகின்றது.

ஒசுசல நிறுவனத்தின் வருமானத்தைக் கணிப்பதில் முழுக் கட்டிடத்தினதும் தேய்மானத்தைக் உள்ளடக்குதல் பொருத்தமற்றது என்பதனாலும் ஒசுசல தொடர்பான தேய்மானத்தை அடையாளம் காண்பது சிரமம் என்பதாலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	ரூபா
அரச மருத்துவ களஞ்சியத்துக்கான உள்நாட்டுக் கொள்வனவு	920,317
அரச மருத்துவ களஞ்சியம் தொடர்பாக வருமதியான தீர்வை	51,927,472
அரச மருத்துவ களஞ்சியத்துக்கான இறக்குமதிகள்	158,744,104
	211,591,893

குறிப்பிட்ட வேறுபாடு மேலே காட்டப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் அரச மருத்துவக் களஞ்சியத்துக்கு மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களும் அதற்கான தீர்வைகளுமாகும். எனினும், 2007ஆம் ஆண்டுக்கு முந்திய இறக்குமதிகள் தொடர்பான பற்றுக் குறிப்புகள் கொடுப்பனவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் வழங்கப்பட்ட 2017 ஜூலை 12ஆம் திகதிய கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

எனவே, திறைசேரியினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை

2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு 247 மொத்த கடன்படுனர்கள் தொடர்பாக மொத்த கடன்படுனர் மீதி 2,983,839,668 ரூபாவில், வணிகக் கடனாளிகளின் தீர்க்கப்படாத மீதி ரூபா 834,130,145 மாத்திரமேயாகும். பின்னர் கொடுப்பனவை மேற்கொள்ளும் அடிப்படையில் பொருட்களைப் பெற்ற கடன்படுனர்களிடமிருந்து வருமதியான பணத்தையும் இது உள்ளடக்குகின்றது.

மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாத மீதி ரூபா 2,556,685,131 தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் ரூபா 1,722,554,986 தொடர்பான தகவல் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

2.5 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

(அ) மேலே 2.3இல் குறிப்பிடப்பட்டவாறு, திறைசேரியினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்துட்ன பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கடன்படுனர் மீதி 878,860,394 ரூபாவில், 201903.31இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மீதி ரூபா 210,346,536 ஆகும். இலங்கைப் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்காக அறவிடவேண்டிய மேலே சொல்லப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட 14,621,371 ரூபாவை அறவிடுவதற்கு சபாநாயகர், சுகாதார அமைச்சுச் செயலாளர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், திருப்தியான பதில் கிடைக்காத காரணத்தினால் இந்த விடயம் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிலும் கலந்துரையாடப்பட்டது. இந்தத் தொகையை அறவிடுதல் தொடர்பாக ஒரு பிரச்சினை காணப்படுவதால், சொல்லப்பட்ட தொகைக்கான அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கும் மேலாக நிலுவை மீதியாக உள்ள 12,408,417 ரூபாவை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலுவையாக உள்ள கடன்படுனர் மீதி அரச நிறுவனங்களிடமிருந்து வருமதியான ரூபா 10,440,049 மற்றும் தனியார் துறையிடமிருந்து வருமதியான ரூபா 272,872 ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சொல்லப்பட்ட முழுத் தொகைக்கும் அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) கணக்காய்வுப் பந்திக்கு இணங்க, 2018 டிசம்பர் 31இல் வருமதியான காப்புறுதி நட்டஈடு 2,279,937 ரூபாவில், 2019 ஏப்ரல் 30ஆம் திகதி உள்ளவாறு ரூபா 198,671.00 தீர்க்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து அறவிடவேண்டியுள்ள தொகை ரூபா 2,081,266.00 ஆகும். Hyoscinie Butylbromide குளிசைகளின் அழிக்கப்பட்ட இருப்புக்காக வருமதி 1,607,828 ரூபாவில் காப்புறுதி நட்டஈடு உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், 2 தொடக்கம் 9 வருடங்கள் வரையான மீதி 525,006.00 ரூபாவில் 2019.04.30 உள்ளவாறு ரூபா 159,460.00 செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமதி 365,556 ரூபாவை கோருவதற்கான எல்லா ஆவணங்களும் காப்புறுதி நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் கோரல் கிடைக்கவேண்டியுள்ளது.

(ஈ) கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு வருமதியான கொள்கலன் வைப்பின் பெறுமதி ரூபா 11,848,455 ஆகக் காணப்பட்டபோதிலும், 2019 ஏப்ரல் 30இல் உள்ளவாறு அது ரூபா 9,479,455.00 ஆகக் குறைவடைந்துள்ளது. அந்தத் தொகையில், 2 தொடக்கம் 11 வருடங்கள் நிலுவையாக உள்ள ரூபா 5,764,322 அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் விதப்புடையுடனும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடனும் திறைசேரிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு, திறைசேரியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், அவசியமான ஏற்பாடுகளை உள்ளடக்கியதன் பின்னர் அது மீண்டும் திறைசேரிக்க சமர்ப்பிக்கப்படவுள்ளது. வருமதியான எஞ்சிய தொகையில், 2,704,000 ரூபாவை சிலோன் சிப்பிங் கோப்பரேசன் இடமிருந்து அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் மீதி 1,011,133 ரூபாவை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) கணனி முறைமையைப் பொருத்துதல் ரூபா 150,000/-

இலத்திரனியல் கேள்விப்பத்திர முறைமையைப் பொருத்துவதற்காக இந்தத் தொகை கொழும்பு பல்கலைக் கழகத்துக்குச் செலுத்தப்பட்டது. ERP முறைமையைப் பொருத்துதல் முடிவடைந்த பின்னர் கொடுக்கல் வாங்கல் தீர்க்கப்பட முடியும்.
அந்த வழங்குனர்கள் தற்போது கூட்டுத்தாபனத்துடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளாத காரணத்தினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 1,237,753 ரூபாவை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
பத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 859,239 முற்பணத்தில் இற்றைவரை தீர்க்கப்பட்ட முற்பனம் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய பதிவு இத்துடன் வழங்கப்படுகின்றது. 195,525 ரூபா முற்பணம் தொடர்பான தற்போதைய நிலைமை கீழே தரப்படுகின்றது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் ரூபா 96,600/-
பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பங்களுக்காக செலுத்தப்பட்ட 96,000 ரூபாவுக்கான பற்றுச்சீட்டுகள் இற்றைவரை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை. அடுத்த வாரத்தினுள் இந்தப் பற்றுச்சீட்டுகளை வழங்குவதற்கு திணைக்களம் உடன்பட்டுள்ளதாக மனித வளங்கள் முகாமையாளர் கூறுகின்றார்.

E.W. Information System Ltd ரூபா. 21990/-
இந்த நிறுவனத்திடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணி இன்னும் பூர்த்திசெய்யப்படவில்லை என IT முகாமையாளர் கூறுகின்றார்.

Southland College பழைய மாணவர் சங்கம் ரூபா 50,000/-
இந்தத் தொகை 2018ஆம் ஆண்டில் விற்பனை ஊக்குவிப்புச் செலவாக கணக்கில் இடப்பட்டுள்ளது. முற்பணங்கள் பதிவேட்டியல் உள்ள பதிவு திருத்தப்படுதல் வேண்டும்.

Islandwide Scientific (Pvt) Ltd ரூபா. 27025/-

சம்பந்தப்பட்ட பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை விரைவில் தீர்ப்பதற்கு ORS முகாமையாளர் உடன்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் நலன்புரிச் சங்கம் ரூபா 50,000/- இதனைத் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பணம் வழங்கிய திகதி	காசோலை இல.	கம்பனியின் பெயர்	தொகை (ரூபா)	தீர்க்கப்பட்ட திகதி
28.12.2018	032435	LANKA SATHOSA	561000.00	3/5/2019
20.12.2018	032261	D SAMSON & SONS (PVT) LTD	4200.00	11/4/2019
20.12.2018	032263	D SAMSON & SONS (PVT) LTD	4200.00	25/4/2019
20.12.2018	032261	D SAMSON & SONS (PVT) LTD	4200.00	11/4/2019
20.12.2018	032259	D SAMSON & SONS (PVT) LTD	4200.00	11/4/2019
06.12.2018	032261	D SAMSON & SONS (PVT) LTD	4200.00	11/4/2019
07.12.2018	031963	STAE TRADING CORPORATION	6700.00	11/2/2019
26.11.2018	031807	TOTAL TOOLS LANKA(PVT) LTD	20214.00	11/4/2019
26.12.2018	032423	CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT	4750.00	02.5.2019
	மொத்தம்		**613,664.00**	

(ஊ) பல்வேறு காரணங்களால் கூட்டுத்தாபனத்தினால் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்ட பொருட்களின் வழங்குனர்கள் மற்றும் வழங்குனர்களால் வங்கிக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் அசல் பிரதிகள் வழங்கப்படாத பொருட்கள் ஆகியவை கணக்கில் சென்மதியான பட்டியலாக காணப்படுகின்றது.

எனினும், 3 வருடங்களுக்கு மேலான சென்மதியான விலைப்பட்டியல்களை ஏற்றுமதிப் பிரிவின் விதப்புரையுடன் தீர்த்தல் அல்லது ஒரு வருமானமாக கணக்கிற்குக் கொண்டுவருதல் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கையாகும். எஞ்சிய சென்மதி விலைப்பட்டியல்கள் ஏற்றுமதிப் பிரிவினால் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளவையாக அல்லது எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ளவையாக ஏற்றுமதிப் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டவையாகும்.

(எ) GMS இற்கான முகவர் தரகுக் கணக்கில் மீதி 53,400,758 ரூபாவை அறவிடுவதற்கு பற்றுக் குறிப்புகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளபோதிலும், அது வழங்குனர்களுக்கு செலுத்தப்படாத தொகையாகும். பற்றுக் குறிப்புகள் வழங்குனர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதிலும், அது GMS இற்கு அறவிடவேண்டிய தொகையாகும். இந்தத் தொகைகளைத் தீர்ப்பதற்கு 2019ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. கூட்டுத்தாபனத்தின் கடமைகள் மற்றும் பணிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

சொல்லப்பட்ட வைபவம் இலங்கைக்கு சுகாதாரத் துறையில் விசேட இடம் வழங்கப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுகாதாரத்துறை தொடர்பான பல்வேறு தரப்புகள் பங்குபற்றிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்கி இலங்கையில் சுகாதாரத் துறையில் நிறுவனத்தின் பங்களிப்பு பற்றி பங்குபற்றுனர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், ஊக்குவிப்பு அனுகூலங்களை அடைவதற்கு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது.

4. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துக்கு இணங்கி ஒழுகாமை

(அ)

i) 2018ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் வாகன விபத்துகள் 12 நடைபெற்றன. அவற்றுள் 6 விபத்துகளில் ஏற்பட்ட நட்டம் முழுவதும் காப்புறுதிக் கம்பனியினால் செலுத்தப்பட்டது. அவ்வாறே மேலும் 5 விபத்துகள் தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தின் ஒரு பகுதி காப்புறுதிக் கம்பனியினால் செலுத்தப்பட்டுள்ள அதேவேளை, எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மற்றுமொரு விபத்துக்கு, நட்டஈட்டைக் கோருவதற்கான ஆவணங்கள் காப்புறுதிக் கம்பனிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ii) நிதியியல் ஒழுங்குவிதி 571
இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது கேள்விப்பத்திர வைப்புக் கணக்கின் வைப்புகளின் பெறுமதியும் வங்கிப் பிணையத்துக்கான வைப்புகளும் ஆகும்.
இந்தத் தொகைகள் பொதுவாக வழங்குனர் கோரும்போது மீளளிக்கப்படுதல் வேண்டும். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புகள் வருமானமாக கணக்கில் இடப்படுகின்றன.

இவற்றுள் பெரும்பாலானவை தொடர்ந்து கூட்டுத்தாபனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோரின் வைப்புகளும் ஏற்றுமதிப் பிரிவினால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோரிடமிருந்து நட்டஈட்டை அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வைப்புகளும் ஆகும் என்பதுடன் அது தொடர்பான விதப்புரைகள் கிடைக்கும் வரை நிறுத்திவைக்கப்படவேண்டியுள்ளது. எனினும், வருமானமாக கணக்கில் இடக்கூடிய தொகைகளை அடையாளம் காண்பதற்கு காலத்துக்குக் காலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

iii) நிதியியல் ஒழுங்குவிதிகள் 757(2)(அ)
எல்லா அரச ஒசுசல நிறுவனங்களினதும் இரத்மலானை களஞ்சியக் கட்டிடத் தொகுதியினதும் இருப்பை உறுதிப்படுத்தல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் தலைமை அலுவலகத்தின் இருப்பை உறதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அறிக்கைகளை இம்மாதத்தினுள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவை அடுத்த ஆண்டில் தாமதமின்றி சமர்ப்பிக்கப்படும்.

iv) சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். அடையாளம் காணப்பட்ட பொருட்களை அழித்தல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆ) தற்போது இயங்கும் நிலையில் இல்லாத கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவின் ஆலோசனை கோரப்பட்டது. சொல்லப்பட்ட வாகனங்களுக்கான சுயாதீன நிறுவனம் ஒன்றிலிருந்து மதிப்பீட்டைப் பெறுவதற்கு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மூன்று வாகனங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு அது தொடர்பாக மேலும் நடவடிக்கை மேற்கொள்வதற்காக கோப்பு கொள்வனவுத் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

அதேபோன்று, தற்போது தலைமை அலுவலகத்தில் உள்ள முச்சக்கரவண்டியைக் கையுதிர்ப்பதற்கு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக சுயாதீன நிறுவனத்தின் மதிப்பீட்டு அறிக்கையையும் சுகாதார அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் அறிக்கையையும் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தற்போது சுயாதீன நிறுவனத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை கிடைத்துள்ளது. ஆனால் சுகாதார அமைச்சின் அறிக்கை இற்றைவரை கிடைக்கவில்லை. சுகாதார அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் தொழில்நுட்ப அலுவலருக்கு தொலைபேசி மூலம் ஒரு நினைவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட அறிக்கையை துரிதமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளபடும் என எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

5.1 முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

(அ) கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்கள் மீது கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) எதிர்காலத்தில் இந்த நிலைமையை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ)

(i) அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம்.

(ii) ERP கருத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(iii) ERP கருத்திட்டத்தின் பூர்த்தியுடன் இந்த விடயமும் மேற்கொள்ளப்படும்.

(iv) எல்லா தொழிற்சங்கங்கள், விசேட பதவிகளை வகிக்கும் குழுக்கள் மற்றும் தனிப்பட்ட ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருடன் கலந்துரையாடப்பட்டு பிரேரணைகளை உள்ளடக்கிய வரைவைத் தயாரித்தல் அதன் இறுதிக்கட்டத்தில் உள்ளது. அது சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்படவுள்ளது.

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் திருத்தத்தின் கீழ், "முகாமைத்துவப் பயிலுனர்" என்னும் ஒரு புதிய பதவியை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக மற்றும் புற விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவுசெய்யப்படுவோருக்கு நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் பற்றி ஒரு வருட பயிற்சி அளிக்கப்படும். ஒரு முகாமைத்துவப் பதவி வெற்றிடம் ஏற்படும்போது, அந்தப் பயிலுனர்கள் நியமனத்திற்காக கவனத்தில்கொள்ளப்படுவர்.

முகாமைத்துவப் பதவி ஒன்று வெற்றிடம் ஏற்படவுள்ளபோது அது முன்கூட்டியே அடையாளம் காணப்பட்டு, தகைமைபெற்ற உள்ளக மற்றும் புற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(vi) பதவி உயர்வுகள் தகுந்தவாறு வழங்கப்பட்டன.

(vii) நிறுவனத்தின் பல்வேறு வகுதி ஊழியர்களிடையே குழு மனப்பான்மையை விருத்தி செய்யும் நோக்குடன் மனப்பாங்கு ரீதியான மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு வெளி இடங்களில் நிகழ்ச்சித்திட்டங்களும் விடயம் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

ஊழியர்களிடையே குழு மனப்பான்மையையும் உற்சாகத்தையும் ஊக்குவிப்பதற்காக கூலியாட்கள் தரத்துக்கு 2017ஆம் ஆண்டிலும் முகாமைத்துவ உதவியாளர் தரத்துக்கு 2018ஆம் ஆண்டிலும் இரண்டு நாள் வெளி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அவ்வாறே, நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்தவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படவுள்ளன.

(ஈ) பல்வேறு விசாரணைகளை / ஒழுக்காற்று விசாரணைகளை மனித வளங்கள் பிரிவு நடத்துவதன் விளைவாக, 06 ஊழியர்களுக்கு இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 06 ஊழியர்களும் ஏற்கனவே கூட்டுத்தாபனத்தின் சேவையை விட்டு விலகியுள்ளனர். ஆனால், விசாரணைகள் / ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடைந்ததன் பேரில் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, அவர்களின் இடருதவிக் கடன் நிலுவைகளை அறவிட முடியும். அதன் விளைவாக கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித நிதியியல் நட்டமும் ஏற்படவில்லை. தற்போது சேவையில் உள்ள ஊழியர்களிடமிருந்து இடருதவிக் கடன்கள் தகுந்தவாறு அறவிடப்படுகின்றன.

இரண்டு ஊழியர்களின் இடருதவிக் கடன் நிலுவைகள் இறுதிக் கொடுப்பனவில் இருந்து கழிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டில் கணக்கில் இடப்பட்டன.

(உ) இவற்றுள் சில தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் இறக்குமதிப் பிரிவினால் இழைக்கப்பட்ட சில தவறுகள் தீர்க்கப்படவேண்டியுள்ளன. ஏற்றுமதிப் பிரிவுடன் கலந்துரையாடியதன் பின்னர் அவற்றைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஊ) 2017ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளில், இறுதி இருப்புப் உறுதிப்படுத்தலுக்கு இணங்க, தரம் குன்றிய மருந்துகளின் பெறுமதி ரூபா 44.9 மில்லியன் ஆகும். இதில் ரூபா. 17.8 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. மீதி ரூபா 27 மில்லியனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017ஆம் ஆண்டில், ரூபா 70 மில்லியன் பெறுமதியான மருந்துகள் காலாவதியாகின. அதில் ரூபா 17 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. மீதியை அறவிடுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின் (2018) இறுதி இருப்பு உறுதிப்படுத்தலுக்கு இணங்க, தரம் குன்றிய மருந்துகளின் பெறுமதி ரூபா 14 மில்லியனில் 99% அறவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் காலாவதியான மருந்துகளின் பெறுமதி 37 மில்லியனில் ரூபா 3.7 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அறவிடுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட விபரமான அட்டவணையை கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(எ) மீளாய்வாண்டில், 39 ஒசுசல விற்பனை நிலையங்களில் 24 நட்டத்தில் இயங்கின. அவற்றுள் அவிசாவளை, மினுவாங்கொடை, தியத்தலாவை, தங்கல்லை, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உள்ள விற்பனை நிலையங்கள் விற்பனையில் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளதுடன் நட்டங்கள் குறைவடைந்துள்ளன.

2018ஆம் ஆண்டில் புதிய நான்கு ஒசுசல நிறுவனங்கள் திறக்கப்பட்டன. இவை வருடம் முழுவதும் வெவ்வேறு மாதங்களில் புதிய மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டதால் உடனடியாக இலாபத்தை எதிர்பார்க்க முடியவில்லை. நட்டங்களுக்கான ஏனைய காரணங்கள் ஒசுசல கட்டிடங்களுக்குச் செலுத்தப்பட்ட வாடகைகளும் மருந்துகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளுமாகும். இந்நிலைமையை நிவர்த்திப்பதற்காக பல்வேறு உபாயங்கள் எதிர்வரும் வருடங்களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏ)கணக்காய்வில் காட்டப்பட்டவாறு, 2012.01.10இல் இருந்து 2018.12.31 வரையான காலப்பகுதியில் வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்காக வழங்கப்பட்ட பற்றுக்குறிப்புகளின் பெறுமதி ரூபா 1,754,661,431 சரியானதாகும்.
இந்தத் தொகையில் 2018.12.31இல் உள்ளவாறு ரூபா 943,466,372 வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் அதில் இன்னும் அறவிடவேண்டியிருக்கும் தொகை ரூபா 811,195,059 ஆகும்.

கணக்காய்வு விசாரணையின்போது ரூபா 47,106,121 கரும்பட்டியலில் இடப்பட்ட வழங்குனரிடமிருந்து அறவிடப்படவேண்டும் என காட்டப்பட்டிருந்தபோதிலும், 2018.12.31இல் கரும்பட்டியலில் இடப்பட்டிருந்த வழங்குனரிடமிருந்து அறவிடவேண்டிய தொகை ரூபா 283,811,421 ஆகும். சம்பந்தப்பட்ட ஆவணங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பற்றுக் குறிப்புகளை வழங்கியதன் பின்னர் நிலுவைகளை வழங்குனர்களிடமிருந்து அறவிடுதல் ஒரு இலகுவான காரியம் அல்லாவிடினும், ஆகக் குறைந்தது தவணைக்கொடுப்பனவுகளாகவேனும் பற்றுக் குறிப்பு மீதிகளை அறவிடும் நடவடிக்கையில் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. அதன் பிரகாரம், 2018.12.31இல் அறவிட வேண்டியதாக காட்டப்பட்டுள்ள ரூபா 811,195,059 பெறுமதியில் 2019.04.30ஆம் திகதி ரூபா 44,760,118.38 அறவிடப்பட்டுள்ளதுடன் கரும்பட்டியலில் இடப்பட்ட வழங்குனரிடமிருந்து சம்பந்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும்.

(ஐ) இந்தக் கணக்கு கொமர்ஷல் வங்கியில் பல்வேறு தேவைகளுக்காக திறக்கப்பட்ட கணக்காகும். தற்போது பிரதானமாக அரச வங்கிகளில் கணக்குகள் பேணப்படுவதால் மேலே சொல்லப்பட்ட கணக்கை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5.2 கொள்வனவு நடவடிக்கைகளில் குறைபாடுகளும் வேறுபாடுகளும்

(அ) அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். ஆயினும், கொள்வனவின் தன்மைக்கேற்ப சொல்லப்பட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளுதல் நடைமுறையில் சாத்தியமற்றதாகும்.

(ஆ)

I. சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, எதிர்காலத்தில் கொள்வனவு நடவடிக்கைகளின்போது அந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

II. கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் பிரிவு 5.3.1 (ஈ) இன் பிரகாரம் விலைமனுக் கோரல் ஆவணங்கள் கொள்வனவுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு எல்லா ஆவணங்களுக்கும் அங்கீகாரம் பெறப்பட்டது என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம். மேலும், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்படவில்லை என்னும் சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் சொல்லப்பட்ட குறைபாடு எதிர்கால கொள்வனவுகளின்போது நிவர்த்திக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

III. சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் சொல்லப்பட்ட குறைபாடு எதிர்கால கொள்வனவுகளின்போது நிவர்த்திக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

IV. சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் சொல்லப்பட்ட குறைபாடு எதிர்கால கொள்வனவுகளின்போது நிவர்த்திக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

V. சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் சொல்லப்பட்ட குறைபாடு எதிர்கால கொள்வனவுகளின்போது நிவர்த்திக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

(அ)

(i) 2015 மார்ச் 15ஆம் திகதி அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டி 4.2.3 தொடர்பாக வெளியிடப்பட்ட பின்னிணைப்புக்கு இணங்க, கொள்வனவு நடவடிக்கைகளுக்கான கால வரையறை 8 வாரங்கள் என குறிப்பிடப்பட்டபோதிலும், சர்வதேச போட்டித்தன்மையான விலைகூறல் நடவடிக்கையைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட போட்டித்தன்மையான விலைகூறல் நடவடிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் உயிர் காக்கும் மருந்துகள் தொடர்பாக கொள்வனவுகளுக்கான பல்வேறு காரணங்களால் இந்தக் கால வரையறையை நடைமுறையில் பிரயோகித்தல் சிரமம் ஆகும். பொதுவான கொள்வனவு வழிகாட்டிகளில் மருந்துப் பொருட்களின் கொள்வனவு நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்துக்குமான காலவரையறை குறிப்பாகத் தரப்படவில்லை. எனவே, உயிர் காக்கும் மருந்துகளைக் கொள்வனவு செய்தல் சாதாரண மருந்துகளைக் கொள்வனவு செய்வதிலிருந்து வேறுபடுகின்றன. எனவே, சில நடவடிக்கைகள் கொள்வனவை மேற்கொள்ளும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்.

ஆகவே, உயிர் காக்கும் மருந்துகளின் வழிகாட்டல்களின் கொள்வனவுக்கான கொள்வனவு வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்கு இணங்கி ஒழுவதில் நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன.

இருப்பினும், இந்தக் கணக்காய்வு விசாரணை தொடர்பான கொள்வனவு அவசர கொள்வனவாகக் கருதப்பட்டு, ஏனைய கொள்வனவுகளை விட முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தினுள் பூர்த்திசெய்யப்பட்டது.

மேலும், இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் இந்த மருந்து தொடர்பாக விலைக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டதனால், கொள்வனவுக் கோவையை மீண்டும் கொள்வனவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தல் போன்ற காரணங்களால் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் நடவடிக்கைகளுக்காக மேலதிக காலம் எடுத்தது.

(ii) விதந்துரைக்கப்பட்ட அதிகுறைந்த விலைக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டதால், அதை மேலதிக செலவாகக் குறிப்பிடுதல் பிழையாகும்.

(iii) இருப்புகளை வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி தொடர்பாக எந்த கணக்காய்வு விசாரணை குறிப்பிடுகின்றது என்பது தெளிவில்லை. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது, இது மருத்துவ வழங்கல் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்ட பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட திகதியாகும் என தெரிவிக்கப்பட்டது.

2018.05.30ஆம் திகதிய 2018/SPC/E/R/P/00559 ஆம் இலக்க மருந்துகளுக்கான கட்டளை 2018.06.06ஆம் திகதி கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்தது. ஆகவே, 9 நாட்களினுள் (7 வேலை நாட்கள்) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைக்கு இணங்க விலைகூறல்களைக் கோருவதன் மூலம் மருந்துக் கொள்வனவை மேற்கொள்ளுதல் முற்றிலும் சாத்தியமானதல்ல. எனவே, கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டவாறு, கட்டளைக்கான வழங்கலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதனை உள்நாட்டுக் கொள்வனவாகக் குறிப்பிடுதல் ஏற்புடையதல்ல.

(iv) தேவைப்பாட்டின் அவசரத் தன்மையைக் கவனத்தில்கொண்டு தலைவரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலை மனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஒரு நாள் மட்டுமே வழங்கப்பட்டது.

(v) இது ஓர் அவசரக் கொள்வனவாகும். அவசரக் கொள்வனவின்போது விலைமனுக்களை குறுகிய காலத்தினுள் பெறவேண்டியிருந்ததால், விலைமனு பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. இதுவே அவசர கொள்வனவுகளில் மேற்கொள்ளப்படும் சாதாரண நடவடிக்கையாகும்.

(vi) இது ஓர் அவசரக் கொள்வனவாகும். அவசரக் கொள்வனவின்போது விலைமனுக்களை குறுகிய காலத்தினுள் பெறவேண்டியிருந்ததால், விலைமனு பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. இதுவே அவசர கொள்வனவுகளில் மேற்கொள்ளப்படும் சாதாரண நடவடிக்கையாகும்.

(vii) நாணயக் கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம், வழங்கல் மேற்கொள்ளப்பட்டு 45 நாட்களின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளவேண்டியிருந்தது. அதற்கிணங்க, முழுத்தொகையையும் 45 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனவே, உங்கள் அவதானிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

(viii) சாதாரண நடைமுறைக்கிணங்க, 50 – 100 மில்லியன் வரையிலான கேள்விப்பத்திரங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கு 05 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழு நியமிக்கப்படுகின்றது. இந்தக் குழு, பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி), சம்பந்தப்பட்ட துறையில் 02 மருத்துவ விசேட நிபுணர்கள், சுகாதார அமைச்சின் ஓர் உதவிச் செயலாளர், SPC யின் நிதிப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கணக்காளர் ஆகியோரை உள்ளடக்கியதாகும். எனினும், பிராந்தியக் கொள்வனவுகளிலும் அவசரக் கொள்வனவுகளிலும் விலைமனுக்களை மதிப்பிடுவதற்கு தொழில்நுட்பப் பிரிவுக்கு 03 நாட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றது. இங்கு, மருந்துகளைப் பதிவுசெய்தல், விதிப்புரைகளுக்கு இசைவாக இருத்தல், முன்னைய முறைப்பாடுகள் மற்றும் மாதிரிகளை வழங்குதல் போன்ற விலைமனுவின் பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்ததுடன் சொல்லப்பட்ட காலப்பகுதியினுள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்காக மேலே குறிப்பிடப்பட்ட 05 உறுப்பினர்களையும் கூட்டுதல் நடைமுறையில் சாத்தியமற்றதாகும்.

குறிப்பாக, சிரேஷ்ட மருத்துவ விசேட நிபுணர்கள் இறுக்கமான கால அட்டவணையைக் கொண்டுள்ளதால், அவர்களை இந்த நோக்கத்துக்காக அழைத்தல் மிகவும் சிரமம் ஆகும். இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு, இந்த மருந்துகளை நோயாளிகளுக்கு அவசரமாக வழங்கவேண்டும் என்பதால், தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கு ஒரு மருத்துவரின் விதப்புரைகளைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் அங்கீகாரம் வழங்கினார்.

(ix) கொள்வனவு வழிகாட்டல் 2.8.4இன் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக்காக பொருத்தமான ஆட்களை நியமிக்கும் அதிகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத் தலைவரினால் அந்த அதிகாரம் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் முகாமைத்துவப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட மருத்துவ விசேட நிபுணர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கை தலைவரின் தலைமையிலான கொள்வனவுக் குழுவில் அங்கீகரிப்பதன் மூலம், அத்தகைய அதிகாரம் தனக்கு வழங்கப்பட்டதாக முகாமைத்துவப் பணிப்பாளரே உறுதிப்படுத்தியுள்ளார்.

(x) தொழில்நுட்ப மதிப்பீடுகளை நடத்துவதன் மூலம், தங்களால் கூறப்பட்ட விடயங்களை தொழில்நுட்ப மதிப்பீட்டில் பரிசீலிக்க முடியாது என கூறும் ஏற்பாடுகள் எதுவும் இல்லை. மருந்துகள் தொடர்பான நடவடிக்கைகளில் தொழில்நுட்ப மதிப்பீட்டை நடத்தும் மருத்துவ விசேட நிபுணர்களின் அபிப்பிராயத்துக்கு அல்லது விதப்புரைக்கு முரணாக செயற்படுதல் புத்திசாலித்தனமானது அல்ல என்னும் பொதுவான புரிந்துணர்வும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். குறிப்பாக, அவசர தேவைப்பாடுகளின்போது கொள்வனவுகள் தொடர்பாக மதிப்பீடுகளை நடத்தும் மருத்துவ விசேட நிபுணர்களால் வழங்கப்பட்ட மருந்துகள் தொடர்பாக விதப்புரைகளை வழங்க முடியாது என தெரிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில், அந்த மருந்துப் பொருட்களை நிராகரிப்பதைத் தவிர மாற்று வழி இல்லை. விலைமனு விதந்துரைக்கப்பட்ட மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதால், விதந்துரைக்கப்படாத வழங்குனர்களின் விலைமனுக்களுடன் ஒப்பிட்டு மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடுதல் சரியானது அல்ல.

(ஆ) குருதியிலுள்ள குளுக்கோஸ் அளவைப் பரிசோதிக்கும் பட்டிகளின் கொள்வனவு தொடர்பான விசாரணை

(இ) பின்வரும் காரணங்களால் விலைமனுதாரருக்கு ஒரே நேரத்தில் தொலைநகல்களை அனுப்பிவைக்க முடியவில்லை.

இந்தக் கேள்விப்பத்திரத்துக்காக உள்நாட்டையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 38 வழங்குனர்களுக்கு விலைமனுக்கள் தொலைநகலில் அனுப்பவேண்டியிருந்ததுடன் முதலாவது நாளில் சில வழங்குனர்களின் தொலைநகல் இலக்கங்கள் செயற்படாத காரணத்தினால் வினைமனு ஆவணங்களை 03 வெவ்வேறு நாட்களில் தொலைநகலில் அனுப்பவேண்டியிருந்தது. இதனை சான்றுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தொலைநகல் இயந்திரத்திலிருந்து ஓர் அறிக்கை கிடைப்பதில்லை. ஒரு தொலை நகலை அனுப்புவதற்கு 03 எத்தனங்களில் தொலைநகல் இயந்திரத்திலிருந்து பதில் கிடைக்காதபோது, அதே தினத்தில் தொலைநகலை அனுப்புவதற்கு நேரம் ஒதுக்குதல் சாத்தியமற்றமாகும். ஏனைய கட்டளைகள் தொடர்பான விலைமனுக்களும் அதே தினத்தில் தொலைநகலில் எமக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதால், இது இந்த விலைமனு தொடர்பான ஆவணங்களுக்கு மாத்திரமன்றி தொலைநகலில் அனுப்பப்படும் எல்லா ஆவணங்களுக்கும் ஏற்புடையதாகும். வழங்குனர்களின் செயற்பாடற்ற தொலைநகல் இயந்திரங்கள் தொடர்பாக எமது நிறுவனம் எவ்வித பொறுப்பையும் ஏற்க முடியாது. எனினும், சம்பந்தப்பட்ட தொலைநகல்கள் மூன்று நாட்கள் முயற்சித்த பின்னரே அனுப்பப்பட்டன. எனவே, விலைமனு ஆவணங்களை தொலைநகலில் அனுப்புவது தொடர்பாக எமது நிறுவனம் அதிகூடிய நீதியை உறுதிப்படுத்தியது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

மேலும், விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூன்று நாட்கள் முடிவடைந்த பின்னர் கூட எல்லா விலைமனுதாரர்களுக்கும் நியாயமான காலம் வழங்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

(ஈ) இது சரியானது. எனினும், 2018.01.08 முதல் 2018.09.04 வரையான 210 நாட்களுக்கும் அதிகமான காலப்பகுதி விலைமனு முறி செல்லுபடிக் காலமாக வழங்கப்பட்டிருப்பதால், முறியின் செல்லுபடிக்காலம் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படாவிடினும், முறிக்காலப்பகுதியினுள் ஒரு காப்பீடு கிடைத்தது. பதவி குறிப்பிடப்படாதபோதிலும், கம்பனியின் சம்பந்தப்பட்ட இலச்சினை பொறிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டிருந்தது. அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். விடயத்தைப் புரிந்துகொண்டு, அதிகாரம் வழங்கப்பட்டதன்மீதமைவாக மேலே சொல்லப்பட்ட கடிதத்தைப் பெற்ற பின்னர் எதிர்கால நடவடிக்கைகளைத் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. விலைமனு முறி ஆவணங்களில் சம்பத்தப்பட்ட உற்பத்தியாளரின் பெயர் குறிப்பிடப்படாதபோதிலும், ஆவணங்களின் ஒரு பகுதியாக கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழில் மருந்து உற்பத்தியாளரின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) மதிப்பீடுகளை மேற்கொள்வதில், கட்டாயமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைமுறை விடயங்களுக்கு சிறிது நேரம் எடுத்துள்ளதுடன் சாதாரண கொள்வனவை விட வேறுபட்ட சிக்கலான விதிப்புரைகளைக்கொண்ட ஒரு பொருள் என்பதால் இதனை மதிப்பிடுவதில் மேலதிக நேரம் எடுத்தது. இந்தக் கேள்விப்பத்திரத்தை இரண்டு சந்தர்ப்பங்களில் மதிப்பிடவேண்டியிருந்ததால், மேலதிக நேரம் எடுத்தது. மேலும், மேலே சொல்லப்பட்ட காலப்பகுதியில், இந்தக் கேள்விப்பத்திரத்துக்குப் புறம்பாக தொழில்நுட்பப் பிரிவு சுமார் 1300 பொருட்களின் மதிப்பீட்டை முடித்திருந்ததுடன் அவற்றை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆற்றப்படுத்தியது.

(ஊ) இந்தக் கேள்விப்பத்திரம் வரையறுக்கப்பட்ட போட்டித்தன்மையான விலைமனு முறைமையின் கீழ் கோரப்பட்டிருந்ததுடன் இந்த விசேட கொள்வனவை கொள்வனவு வழிகாட்டலின் கீழ் தரப்பட்டுள்ள காலப்பகுதியிலும் பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்தக் கொள்வனவின்போது மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைமுறைகளை தகுந்தவாறு பூர்த்திசெய்வதில், நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக குறிப்பிட்ட காலம் எடுத்தது.

(எ) மருத்துவ வழங்கல் பிரிவு 2017.10.06ஆம் திகதி கூட்டுத்தாபனத்துக்குஇந்தக் கட்டளையை அனுப்பி வைத்தது. அதன் முதல் தொகுதி 2018.01.01இல் கோரப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையை 04 மாதம் போன்ற குறுகிய காலத்தினுள் வழங்குதல் நடைமுறையில் சாத்தியமற்றதாகும். இந்தக் கட்டளைக்கு எடுத்த காலம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைமுறையைப் பின்பற்றி அத்தகைய ஒரு கட்டளையை வழங்குவதற்கு எடுக்கும் சாதாரண காலமே ஆகும். முதல் தொகுதி வழங்கல் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்து 9½ மாதங்களுக்கு முன்னரே வழங்கப்பட்டது.

i) 2018/SPC/L/R/D/00366 ஆம் இலக்கக் கட்டளை ஊடாக கோரப்பட்ட பொருட்கள் தொடர்பாக, குறிப்பிட்ட வழங்குனரிடமிருந்து நேரடிக் கொள்வனவு முறைமையின் கீழ் அத்தகைய பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் என மருத்துவ வழங்கல் பிரிவினால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க நேரடிக் கொள்வனவுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ii) இந்தப் பொருளின் அவசரகால தேவைப்பாட்டைக் கவனத்தில் கொண்டு கொள்வனவுக் குழுவின் காப்பு அங்கீகாரத்துக்கு அமைவாக தலைவரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் இந்தக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

iii) அவசர தேவைப்பாட்டைக் கவனத்தில்கொண்டு கட்டளையை அதிகரிப்பதற்கு கொள்வனவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டபோது கொள்வனவுக் குழுவின் காப்பு அங்கீகாரத்தைப் பெறுமாறு தெரிவித்து தலைவரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் இந்தக் கட்டளைக்கான வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

iv) மேலதிக செலவினம் தொடர்பாக குறிப்பிடப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்கின்றோம். பிரதான வழங்கலில் தாமதம் காரணமாக மேலதிக செலவினம் ஏற்பட்டிருப்பின், அதனை பிரதான வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு ஒரு முறையியல் உள்ளது.

v) இது அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கொள்வனவாகும். அவசர கொள்வனவின்போது விலைமனுக்கள் குறுகிய காலப்பகுதியினுள் பெறப்படவேண்டும் என்பதால், விலைமனு முறி அல்லது செயலாற்ற முறி பெறப்படாததுடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. அவசர கொள்வனவின்போது பின்பற்றப்படும் சாதாரண நடவடிக்கை இதுவாகும்.

vi) அவசர தேவைப்பாடுகளின்போது இந்த இரண்டு முறையின் கீழும் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் மருத்துவ வழங்கல் பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

vii) மருத்துவ வழங்கல் பிரிவினால் அனுப்பப்படும் கட்டளைகளுக்கு போதிய நிதி கூட்டுத்தானத்துக்குக் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அவ்வாறான சூழ்நிலைகள் நிகழ்கின்றன என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம். எனினும், நிலுவைகளை அறவிடுவதற்காக பற்றுக் குறிப்புகள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(உ) மேலதிக செலவினம் தொடர்பாக, இதற்கான பொறுப்பு கூட்டுத்தானத்துக்குக் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அவ்வாறான சூழ்நிலைகள் நிகழ்கின்றன என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம். எனினும், நிலுவைகளை அறவிடுவதற்காக பற்றுக் குறிப்புகள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஊ) மீளாய்வாண்டில், மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே 300,000 மற்றும் 250,00 அலகுகள் Imatinib Mesilate கூட்டுக்குளிகைகள் 100 மிகி வழங்கப்படவேண்டியிருந்தது. அவை பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) இந்தக் கொள்வனவு தொடர்பான 2017 செப்டம்பர் 14ஆம் திகதிய கொள்வனவுக் குழுவின் விதப்புரை ஆகக்குறைந்த விலைமனுவை சமர்ப்பித்த வழங்குனருக்கு வழங்குவதற்காகும் என்பதுடன் அது நேரடி வழங்கல் அல்ல. அது இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தது. அதாவது, வழங்கப்பட்ட களஞ்சியத்தின் வெப்பநிலை மற்றும் குளிகைகளில் 'DHS' இலச்சினையை பொறித்தல் ஆகியவற்றுக்கு மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் அங்கீகாரம்

பெறப்படுதல் வேண்டும் என்பதாகும். 'DHS' இலச்சினையைப் பொறிக்க முடியாது என விலைமனுதாரர் தனது விலைமனுவில் குறிப்பிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, கொள்வனவுக் குழுவின் விதப்புரைக்கு மேலதிக செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறுதல் போன்ற கொள்வனவுப் பிரிவினால் பூர்த்திசெய்யப்படவேண்டிய நடைமுறையைப் பற்றி இறுதித் தீர்மானத்துக்கு வந்த பின்னர், கொள்வனவுத் தீர்மானத்தைக் கொண்ட கோவை தாபனப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. எனினும், கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களுக்கு தனது பதிலை அனுப்புவதற்கு MSD கணிசமான காலத்தை எடுத்தது. தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, MSD யிடமிருந்து பதில் கிடைப்பதற்கு முன்னர் கொள்வனவுக் குழுவின் மேலே சொல்லப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிபந்தனைகளுக்கு அமைவாக விலைமனு வழங்கல் பற்றி விலைமனுதாரருக்கு இறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

உரிய தினத்தினல் மருந்துகளின் முதலாவது தொகுதியை வழங்குவதற்கு தவறிய காரணத்தினால் கேள்விப்பத்திர நிபந்தனைகளின் பிரகாரம் நிலுவைகளை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ii) இலங்கை அரச இலச்சினையை பொதியில் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பொறிக்காமல் முன்னைய இருப்பில் இருந்து ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு MSD அதன் விருப்பத்தைத் தெரிவித்தது.

அதனைத் தொடர்ந்து, பொதியின் வெளிப்புறத்தில் மாத்திரம் அரச இலச்சினையைப் பொறித்து மீதி இருப்பை ஏற்றுக்கொள்வதற்கு MSD யின் அங்கீகாரம் கிடைத்தது.

(iii) (iv) (v) இது ஓர் அவசரக் கொள்வனவு என்பதால் சொல்லப்பட்ட விடயங்களை பூர்த்திசெய்ய முடியவில்லைபோல் தோன்றுகின்றது.

(எ) நத்தைச்சுருள் மாற்றுச் சிகிச்சை உபகரணம் கொள்வனவு தொடர்பாக,

(i) 2017ஆம் ஆண்டின் தேவைப்பாடுகள் தொடர்பான கொள்வனவுக்கான கேள்விப்பத்திரக் கோரிக்கைக் கடிதங்கள் 2017.05.05ஆம் திகதி அனுப்பப்பட்டன. அந்தக் கேள்விப்பத்திரங்கள் கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் 21 நாள் கால இடைவேளையின் பின்னர் 2017.05.26ஆம் திகதி முடிவடைந்தது.

(ii) நாடளாவிய ரீதியிலான கேள்விப்பத்திரங்களுக்கு, தொடர்பான பிரதான தகவல்களை உள்ளடக்கிய விளம்பரங்கள் அரசாங்கப் பத்திரிகைகளிலும் SPC யின் வெப்தளத்திலும் வெளியிடப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்களும் வழங்குனர்களும் பங்குபற்றும் நாடுகளின் விற்பனை முகவர்களுக்கும் தூதரகங்களுக்கும் தெரிவிப்பதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வெப்தளத்தின் ஊடாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட கொள்வனவுக்கு அதிகூடிய விளம்பரம் கொடுப்பதன் மூலம் போட்டித்தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

(iii) எல்லா கட்டளைகளினதும் விதிப்புரைகள் MSD யினால் தயாரிக்கப்பட்டு அத்தகைய விதிப்புரைகள் சூத்திர திருத்தக் குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகை விதிப்புரைகளை மாற்றுவதாயின் அல்லது திருத்துவதாயின், அது MSD யின் பணிப்பாளர் ஊடாக இந்தக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. மேலும், கட்டளைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால், ஒவ்வொரு விதிப்புரையினையும் அங்கீகரித்தல் நடைமுறையில் சிரமமானது என்பதுடன் அது கொள்வனவில் தாமதத்தையும் ஏற்படுத்தலாம்.

(iv) இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சம்பந்தப்பட்ட அறிக்கை நிர்வாகப் பிரிவினால் பேணப்படுவதுடன் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதி தங்கள் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(v) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் வழிகாட்டல் 4.2.3 தொடர்பான இணைப்பு இல.31, 2017 மார்ச் 15ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் கொள்வனவுக்கான கட்டளைப் பட்டியல் 2016.02.24ஆம் திகதி கிடைத்தது. அதன் ஒரு பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

(vi) இந்தக் கோவை தீர்மானங்களை மேற்கொள்ளும் கொள்வனவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. கொள்வனவுத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் கொள்வனவுக் குழுவின் கடமையாகும். ஓர் அரச நிறுவனம் என்ற வகையில், அரசாங்கத்துக்கு அதிகூடிய உற்பத்தித் திறன் கிடைக்கும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(vii) வினைமனுதாரரின் உரிமைகளைக் கையுதிர்ப்பதற்கான காரணங்கள் விலைமனுதாரருக்கு தெளிவாக தெரிவிக்கப்பட்டது. TEC அறிக்கையின் ஒரு பிரதி கணக்காய்வின் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(viii) 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க அரசாங்க ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், PCA-3 பெறப்பட்டிருப்பின், அது இரண்டாவது தடவையாகவும் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என SPC யினால் வெளியிடப்பட்ட கேள்விப்பத்திர அறிவித்தலின் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஒரு நினைவூட்டலாக, 2018.07.06ஆம் திகதி கம்பனிகள் பதிவாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுடன் அதன் பிரதி வழங்குனருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

5.3 ஒப்பந்த நிர்வாகத்தில் தவறுகள்

(அ) உத்தேச கட்டிட நிர்மாண வேலைகள் தொடர்பான ஒப்பந்த வேறுபாடுகள் பற்றி கொள்வனவு வழிகாட்டி 8:13:4இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு புதிதாக அடையாளம் காணப்பட்ட வேலைகளுக்காக புதிய கொள்வனவுச் செயற்பாடுகள் மூலமாக அல்லது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 3:5:1இன் ஆலோசனைகளுக்கு அமைவாக நேரடி ஒப்பந்த முறைமையைப் பின்பற்றி புதிய ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சின் கொள்வனவு குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப தற்போது அந்தக் கட்டிடத்தின் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்துக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

(ஆ)

i) சம்பந்தப்பட்ட அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும், உத்தேச திருத்தம் / மேம்பாடு விசேட தொழில்நுட்ப விடயம் என்பதால் சம்பந்தப்பட்ட முகவராண்மையினால் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதால் அவர்களின் தொழில்நுட்ப அறிக்கை மற்றும் விலைமனுவை அடிப்படையாகக்கொண்டு திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட முகவராண்மையுடன் குறிப்பிட்ட திருத்தம் / மேம்பாடு மேற்கொள்வதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு விதித்துரைக்கப்பட்ட செயலாற்றல் முறியைப் பெற்றதன் பின்னர் குறிப்பிட்ட முற்பணம் விடுவிக்கப்பட்டது.


ii) முற்பணம் கிடைத்ததிலிருந்து 10 வாரங்களினுள் சொல்லப்பட்ட திருத்தம் / மேம்பாடு பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும் என ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது உண்மையாயினும், இது ஒரு விசேட தொழில்நுட்ப விடயம் என்பதால், சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே திருத்தத்துக்கான / மேம்பாட்டுக்கான கால எல்லை மீறப்பட்டதாக நாம் உணர்கின்றோம். மேலும், இந்த மின்தூக்கியை திருத்துதல் / மேம்படுத்துதல் இரத்மலானை களஞ்சியத்தில் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதுவும் தாமதத்திற்குப் பங்களிப்புச் செய்திருக்கலாம். ஆயினும், சொல்லப்பட்ட திருத்தம் / மேம்படுத்தல் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டு பரிசோதனையின் பின்னர் சம்பந்தப்பட்ட முகவராண்மையின் பாதுகாப்பு முகாமையாளராலும் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் இயந்திரவியல் பொறியியலாளராலும் சான்றுப்படுத்தப்பட்டு அவர்களின் சான்றுப்படுத்தல் 2019.02.13ஆம் திகதி எம்மிடம் கையளிக்கப்பட்டது.

iii) அவர்கள் செயற்பாடு தாமதித்தபோதிலும், சொல்லப்பட்ட திருத்தம் / மேம்படுத்தல் தடங்கலின்றி மேற்கொள்ளப்பட்டது. இது தொடரும் ஒரு நடைமுறை என்பதாலும் இரத்மலானை களஞ்சியத்தின் கிரமமான தொழிற்பாட்டுக்காக சம்பந்தப்பட்ட திருத்தம் / மேம்படுத்தல் அத்தியாவசியமானதும் முக்கியமானதும் என்பதாலும் சம்பந்தப்பட்ட பணி முகவரினாலேயே தகுந்தவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாலும் மீண்டும் கேள்விப்பத்திரங்களைக் கோருதல் எவ்வித பொருளாதார பயன்களை அல்லது அனுகூலங்களை ஏற்படுத்தாது என்பதாலும் முகவரினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்ற முறியை காசாக மாற்றவேண்டிய தேவை எழாது என்பது எமது அபிப்பிராயமாகும்.


தலைவர்
அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
2019 மே 09

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
மனித வளங்கள் பகுப்பாய்வு


ஊழியர் வகுதிப் பகுப்பாய்வு




ஊழியர் தொடரந்திருக்கும் காலப்பகுதி



ஊழியர் வயதுப் பகுப்பாய்வு



(Rs.000)




அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

பத்தாண்டுச் சுருக்கம் - வருமானக்கூற்று RS.'000'

புரள்வு

விபரம்	2018 ரூபா	2017 ரூபா	2016 ரூபா	2015 ரூபா	2014 ரூபா	2013 ரூபா	2012 ரூபா	2011 ரூபா	2010 ரூபா	2009 ரூபா
புரள்வு - SPC	7,458,320	6,593,401	6,127,478	5,286,876	4,865,151	4,320,300	4,283,232	4,806,170	4,197,759	4,015,962
புரள்வு - DHS	31,436,986	25,970,290	26,127,912	19,176,807	17,269,008	16,815,666	16,608,492	12,569,290	10,968,571	9,990,429
மொத்த புரள்வு	**38,895,306**	**32,563,691**	**32,255,390**	**24,463,683**	**22,134,159**	**21,135,966**	**20,891,724**	**17,375,460**	**15,166,330**	**14,006,391**
மொத்த வணிக இலாபம் - SPC	1,810,383	1,680,368	1,656,938	1,410,722	1,247,074	1,136,403	991,541	1,043,453	995,371	894,232
மொத்த மிகை - DHS	2,125,052	1,887,026	1,850,650	1,386,731	1,333,198	1,185,004	1,193,214	780,735	688,145	622,071
மொத்த மிகை	**3,935,435**	**3,567,394**	**3,507,588**	**2,797,453**	**2,580,272**	**2,321,407**	**2,184,755**	**1,824,188**	**1,683,516**	**1,516,303**
மேந்தலைகள்										
பிற வருமானம்	73,072	53,004	43,085	51,259	25,738	17,537	15,105	23,231	20,414	18,107
நிர்வாகச் செலவுகள்	(1,535,277)	(1,288,183)	(1,101,435)	(1,057,970)	(969,744)	(786,904)	(670,635)	(614,019)	(605,475)	(573,322)
பிற தொழிற்பாட்டுச் செலவுகள்	(691,967)	(741,459)	(580,843)	(563,357)	(749,825)	(791,794)	(745,230)	(492,631)	(285,777)	(203,520)
தொழிற்பாட்டு இலாபம்	1,781,263	1,590,756	**1,868,392**	**1,227,385**	**886,441**	**760,246**	**783,995**	**740,769**	**812,678**	**757,568**
நிதிக் கிரயம்	(1,512)	(1,295)	(1,071)	(1,599)	(124)	(227)	(17)	(3,661)	(17,734)	(8,841)
வங்கி மேலதிகப்பற்று வட்டி	(67,406)	(35,199)	(5,434)	(734)	(149,659)	(1,384)	(290,877)	(419,235)	(315,070)	(350,841)
மொத்த மேந்தலைகள்	**(2,296,162)**	**(2,066,136)**	**(1,688,783)**	**(1,623,660)**	**(1,869,352)**	**(1,580,309)**	**(1,706,759)**	**(1,529,546)**	**(1,224,056)**	**(1,136,524)**
நிதி வருமானம்	7,436	5,765	5,721	5,086	4,896	4,357	3,959	4,102	3,900	3,302
வரிக்கு முந்திய வரி	**1,719,781**	**1,560,027**	**1,867,608**	**1,230,137**	**741,554**	**762,992**	**497,060**	**321,975**	**483,774**	**401,188**
வரிவிதிப்பு	766,632	470,595	625,863	610,539	192,145	320,008	205,282	228,473	243,907	144,883
காலத்திற்கான தேறிய இலா.	**953,149**	**1,089,432**	**1,241,744**	**619,598**	**549,409**	**442,984**	**291,778**	**93,502**	**239,867**	**256,305**
வரையறுத்த நன்மைத்திட்டம்	30,453	(59,575)	10,049	239,887	(212,044)	(31,574)	(14,281)	11,325	-	-
மொத்த விபரமான இலாபம்	**983,603**	**1,029,856**	**1,251,794**	**859,485**	**337,365**	**411,410**	**277,497**	**104,827**	**239,867**	**256,305**



RATIOS


Gross Profit Ratio - SPC (%)	24.3	25.5	27.04	26.68	25.63	26.3	23.15	21.71	23.71	22.27
Gross Profit Ratio - DHS (%)	6.76	7.27	7.08	7.23	7.72	7.05	7.18	6.21	6.27	6.23
Gross Surplus to Sales (%)	10.12	10.96	10.87	11.44	11.66	10.98	10.46	10.50	11.10	10.83
Annual Sales Growth (%) -SPC	13.12	7.60	15.90	8.67	12.61	0.9	(10.88)	14.49	4.53	13.21
Annual Sales Growth (%) -DHS	21.05	(0.60)	36.25	11.05	2.6	1.2	32.1	14.59	9.79	7.35
Total Sales Growth (%)	19.44	0.96	31.85	10.52	4.72	1.17	20.24	14.57	8.28	8.97

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

பத்தாண்டுச் சுருக்கம் - வருமானக்கூற்று **RS.'000'**

புரள்வு

விபரம்	2018 ரூபா	2017 ரூபா	2016 ரூபா	2015 ரூபா	2014 ரூபா	2013 ரூபா	2012 ரூபா	2011 ரூபா	2010 ரூபா	2009 ரூபா
புரள்வு - SPC	7,458,320	6,593,401	6,127,478	5,286,876	4,865,151	4,320,300	4,283,232	4,806,170	4,197,759	4,015,962
புரள்வு - DHS	31,436,986	25,970,290	26,127,912	19,176,807	17,269,008	16,815,666	16,608,492	12,569,290	10,968,571	9,990,429
மொத்த புரள்வு	**38,895,306**	**32,563,691**	**32,255,390**	**24,463,683**	**22,134,159**	**21,135,966**	**20,891,724**	**17,375,460**	**15,166,330**	**14,006,391**
மொத்த வணிக இலாபம் - SPC	1,810,383	1,680,368	1,656,938	1,410,722	1,247,074	1,136,403	991,541	1,043,453	995,371	894,232
மொத்த மிகை - DHS	2,125,052	1,887,026	1,850,650	1,386,731	1,333,198	1,185,004	1,193,214	780,735	688,145	622,071
மொத்த மிகை	**3,935,435**	**3,567,394**	**3,507,588**	**2,797,453**	**2,580,272**	**2,321,407**	**2,184,755**	**1,824,188**	**1,683,516**	**1,516,303**
மேந்தலைகள்										
பிற வருமானம்	73,072	53,004	43,085	51,259	25,738	17,537	15,105	23,231	20,414	18,107
நிர்வாகச் செலவுகள்	(1,535,277)	(1,288,183)	(1,101,435)	(1,057,970)	(969,744)	(786,904)	(670,635)	(614,019)	(605,475)	(573,322)
பிற தொழிற்பாட்டுச் செலவுகள்	(691,967)	(741,459)	(580,843)	(563,357)	(749,825)	(791,794)	(745,230)	(492,631)	(285,777)	(203,520)
தொழிற்பாட்டு இலாபம்	1,781,263	1,590,756	**1,868,392**	**1,227,385**	**886,441**	**760,246**	**783,995**	**740,769**	**812,678**	**757,568**
நிதிக் கிரயம்	(1,512)	(1,295)	(1,071)	(1,599)	(124)	(227)	(17)	(3,661)	(17,734)	(8,841)
வங்கி மேலதிகப்பற்று வட்டி	(67,406)	(35,199)	(5,434)	(734)	(149,659)	(1,384)	(290,877)	(419,235)	(315,070)	(350,841)
மொத்த மேந்தலைகள்	**(2,296,162)**	**(2,066,136)**	**(1,688,783)**	**(1,623,660)**	**(1,869,352)**	**(1,580,309)**	**(1,706,759)**	**(1,529,546)**	**(1,224,056)**	**(1,136,524)**
நிதி வருமானம்	7,436	5,765	5,721	5,086	4,896	4,357	3,959	4,102	3,900	3,302
வரிக்கு முந்திய வரி	**1,719,781**	**1,560,027**	**1,867,608**	**1,230,137**	**741,554**	**762,992**	**497,060**	**321,975**	**483,774**	**401,188**
வரிவிதிப்பு	766,632	470,595	625,863	610,539	192,145	320,008	205,282	228,473	243,907	144,883
காலத்திற்கான தேறிய இலா.	**953,149**	**1,089,432**	**1,241,744**	**619,598**	**549,409**	**442,984**	**291,778**	**93,502**	**239,867**	**256,305**
வரையறுத்த நன்மைத்திட்டம்	30,453	(59,575)	10,049	239,887	(212,044)	(31,574)	(14,281)	11,325	-	-
மொத்த விபரமான இலாபம்	**983,603**	**1,029,856**	**1,251,794**	**859,485**	**337,365**	**411,410**	**277,497**	**104,827**	**239,867**	**256,305**



RATIOS

Gross Profit Ratio - SPC (%)	24.3	25.5	27.04	26.68	25.63	26.3	23.15	21.71	23.71	22.27
Gross Profit Ratio - DHS (%)	6.76	7.27	7.08	7.23	7.72	7.05	7.18	6.21	6.27	6.23
Gross Surplus to Sales (%)	10.12	10.96	10.87	11.44	11.66	10.98	10.46	10.50	11.10	10.83
Annual Sales Growth (%) -SPC	13.12	7.60	15.90	8.67	12.61	0.9	(10.88)	14.49	4.53	13.21
Annual Sales Growth (%) -DHS	21.05	(0.60)	36.25	11.05	2.6	1.2	32.1	14.59	9.79	7.35
Total Sales Growth (%)	19.44	0.96	31.85	10.52	4.72	1.17	20.24	14.57	8.28	8.97

விற்பனை வலையமைப்பு

தலைமை அலுவலகம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி: 011-2320356 – 9 தொலைநகல்: 011-2447118 இணையத்தளம்: www.spc.lk மின்னஞ்சல்: spc@spc.lk

விற்பனைப் பிரிவு
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 011-2632288
தொலைநகல்: 011-2632962

களஞ்சியம்
109 கந்தவல எஸ்ரேட்,
இரத்மலானை.
தொலைபேசி: 011-2634318
தொலைநகல்: 011-2636715

ORS பிரிவு
109 கந்தவல எஸ்ரேட்,.
இரத்மலானை.
தொலைபேசி: 011-2622334

கண்டி களஞ்சியம்
10/B/1, ஹேவஹெட்ட வீதி,
தென்னக்கும்புர
கண்டி
தொலைபேசி: 081-2240274

அரச ஒசுசல விற்பனை நிலையங்கள்

ஒசுசல – அம்பாறை
டெம்பிள் சந்தி,
டி.எஸ்.சேனாநாயக்க
மாவத்தை,
அம்பாறை. 063-2223088

ஒசுசல – அக்கறைப்பற்று
இல. 74,
T.D.02 பிரதான வீதி,
அக்கரைப்பற்று.
தொ.பே. 067-2057625

ஒசுசல – அனுராதபுரம்
வங்கி வீதி
அனுராதபுரம்.
தொலைபேசி: 025-2222181

ஒசுசல – அவிசாவளை
G 33/34/35,
மத்திய பஸ் நிலையம்,
அவிசாவளை.
தொலைபேசி: 036-2222501

புதிய ஒசுசல – பதுளை
CWE கட்டடம்,
பண்டாரவளை வீதி,
பதுளை.
தொலைபேசி: 055–2229837

ஒசுசல – பண்டாரகம
வைத்தியசாலை வளாகம்,
ஹொரண வீதி,
பண்டாரகம.
தொலைபேசி: 038-2288671

ஒசுசல – பேருவளை
பநோகூ சங்க கட்டிடம்
பேருவளை
தொலைபேசி 034-2278578

ஒசுசல – பொறளை
லேடி ரிஜ்வே வளாகம்,
பொறளை.
தொலைபேசி: 011-2697660

ஒசுசல – கொழும்பு 1
79, சேர் பாறன் ஜயதிலக
மாவத்தை,
கொழும்பு 01. - 2328046

ஒசுசல – கொழும்பு 4
85, காலி வீதி,
கொழும்பு 04.
தொலைபேசி: 2587128

ஒசுசல – கொழும்பு 7
255, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07. தொலைபேசி
011-2694716, 011-2672293

ஒசுசல – தியத்தலாவ
பிரதான வீதி,
தியத்தலாவ.
தொலைபேசி: 055-3551624

ஒசுசல – எம்பிலிபிடிய
102, பல்லேகம,
எம்பிலிபிடிய.
தொலைபேசி: 047-2261177

ஒசுசல – கோட்டை
கோட்டை புகையிரத நிலையம்,
கோட்டை.
தொலைபேசி: 011-2336926

ஒசுசல – காலி
61ஏ, வக்வெல்ல வீதி, காலி.
தொலைபேசி: 091-2234726

ஒசுசல – கம்பஹா
266, கொழும்பு வீதி
கம்பஹா
தொலைபேசி: 033-2234516

ஒசுசல–அம்பாந்தோட்டை
இல.3, பரக்கா வீதி,
ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222163

ஒசுசல – ஜயவர்தனபுர
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது
வைத்தியசாலை,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
தொலைபேசி: 011-2779414

ஒசுசல – யாழ்ப்பாணம்
149ஏ, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2219262

ஒசுசல – கண்டி
லங்கம மாவத்தை
கண்டி
தொலைபேசி.081-2225175

ஒசுசல – கராபிட்டிய
175, ஹிரிபுர வீதி,
கராபிட்டிய
தொலைபேசி:091 2226947

ஒசுசல – (கண்டி புகை.நி)
புகையிரத நிலைய வீதி
கண்டி
தொலைபேசி 081-2225176

ஒசுசல – குருணாகல்
28, வீரதுங்க கட்டடம்,
பௌத்தாலோக மாவத்தை,
குருணாகல்.
தொலைபேசி: 037-2230840

ஒசுசல – மஹரகம
71/9, அல்விஸ் கட்டிடம்
பழைய வீதி, மஹரகம
தொலைபேசி: 0112-2745640

ஒசுசல – மாத்தறை
23பி, சரிக்காராமய,
அனகாரிக தர்மபால
மாவத்தை, மாத்தறை.
தொலைபேசி: 041-2231871

ஒசுசல – மினுவங்கொட
24, பழைய நகர மண்டப கட்.
கொழும்பு வீதி,
மினுவங்கொட.
தொலைபேசி: 011-2295120

ஒசுசல, மொணறாகலை
31, பொத்துவில் வீதி,
மொணறாகலை
தொலைபேசி 055-2277712

ஒசுசல – நாகொட
313, மதுகம வீதி,
நாகொட, களுத்துறை
தொலைபேசி: 034-2222818

ஒசுசல – நீர்கொழும்பு
134, கொழும்பு வீதி,
நீர்கொழும்பு.
தொலைபேசி: 031 2228599

ஒசுசல – நிந்தவூர்
இல.40, பிரதான வீதி,
நிந்தவூர்
தொலைபேசி: 067-2058208

ஒசுசல – நுகேகொட
145A/1,
எஸ்.டி.எஸ். ஜயசிங்க
மாவத்தை, நுகேகொட.
தொலைபேசி: 011-2856641

ஒசுசல – பாணந்துறை
159, ப.நோ.கூ.ச. கட்டடம்,
காலி வீதி, பாணந்துறை.
தொலைபேசி: 038-2234767

ஒசுசல - பேராதெனிய
1157, கெட்டம்பே,
பேராதெனிய
தொலைபேசி 081-2386045

ஒசுசல – பிலியந்தலை
1A/21, வித்தியால மாவத்தை
பிலியந்தலை
தொலைபேசி: 0112-2613640

ஒசுசல – பொலனறுவை
வைத்தியசாலைச் சந்தி,
கதுறுவெல வீதி,
பொலனறுவை.
தொலைபேசி: 027-2225465

ஒசுசல – றாகம
61ஏ, மஹபாகே வீதி,
ராகம.
தொலைபேசி: 011-2955219

ஒசுசல – இரத்மலானை
மெகா சதொச,
கொளுமடம சந்தி,
காலி வீதி, இரத்மரானை.
தொலைபேசி: 011-3043789

ஒசுசல – இரத்தினபுரி
32, நந்த எல்லாவல மாவத்தை,
இரத்தினபுரி.
தொலைபேசி: 045-2223014

ஒசுசல – தங்கல்ல
8, இந்திபொக்குனுகொட
வீதி,
தங்காலை.
தொலைபேசி: 047-2241221

சந்தைப்படுத்தல், விற்பனைகள் பிரிவு

75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011-2430778, 011-2328507, 011-2320356-9

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

75, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01, இலங்கை